# ஜனோபகாரி.

# (THE JANOPAKARI.)

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

புஸ்தகம் 3.
Vol. III.

காளயுக்தி௵ மார்கழி௴, DECEMBER, 1918.

சஞ்சிகை 12.
No. 12.

## The Progress of the World.

## பிரபஞ்சப்போக்கு.

**தமிழ்ப்பண்டிதர்களின் மகாநாடு.**

நமது தேசத்தில் பலவித மகாநாடுகள் கூடுவதைப்பற்றி நாம் அறிந்திருக்கிறோம். ஆனால், தமிழ்ப்பாஷையின் அபிவிருத்திக்கான மகாநாடுகள் இதுவரை எங்கும் கூடியதாகத் தெரியவில்லை. இந்தமாதம் திருச்சி ஸெண்ட்ஜோஸப் காலெஜ் லாவிஹாவில் தமிழ்ப்பண்டிதர்களின் முதலாவது மகாநாடு கூடியது. அப்போது தமிழ் ஆசிரியர் ஸ்ரீமான் செல்வகேசவராய முதலியார் அக்கிராஸனம் வகித்தார். அக்கிராஸனாதிபதி தமது பிரசங்கத்தில், வசனநூல்களை எவ்வாறு பெருக்கவேண்டுமென்பதைப்பற்றிப் பேசிவிட்டு, தற்காலத்தில் வெளியாய்க்கொண்டு வரும் போலி நாவல்களைப்பற்றிக் குறிப்பிடுகையில்: இந்நாவல்களில் பலவித கெடுதிகளை விளைவிக்கக்கூடிய விஷயங்கள் காணப்படுகின்றனவென்றும், அவை நமது சகோதர சகோதரிகளைப் பெரிதும் பாதிக்கக்கூடியவையென்றும், அத்தகையன நமது நாட்டுக்கு ஏற்றவையன்றென்றும் சொன்னார். இவ்விஷயம் முற்றிலும் உண்மையே. இன்னும் அவர், வாசகபாட கமிடியிலுள்ள குறைபாடுகளையும், திராவிடக் கல்விக் கூட்டத்திலுள்ள குறைபாடுகளையும் எடுத்துக் கூறியதைப்பற்றி நாம் மெச்சுகின்றோம். அக்கிராசனாதிபதி மீண்டும் குறிப்பிட்டுள்ள இன்னொரு விஷயத்தையும் நாம் கவனிக்கவேண்டும். "நமது பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான வாசகபாடங்களை ஆங்கிலக்கம்பெனியார்கள் அச்சிட்டு நல்ல லாபம் சம்பாதிக்கிறார்கள். இக்காரியத்தை ஏன் ஒரு இந்தியக்கம்பெனி தகுந்த மூலதனத்தைக்கொண்டு செய்யக்கூடாது?" இவ்வாறு அக்கிராசனாதிபதி கேட்டது சரியே. இவ்விஷயத்தைச் செல்வவான்களாயுள்ள தமிழ் மக்கள் கைக்கொண்டு தக்கது செய்வார்களென நம்புகிறோம்.

**மலாய்த்தீவுகளில் இந்தியர் குடியேறுதல்.**

மலாய் நாடுகளில் குடியேறிய இந்தியர்கள் அனுபவித்துவரும் கஷ்டங்களை நேரில்கண்டு, அவைகளை நிவிருத்தி செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றி ஆலோசிப்பதற்காக மிஸ்டர் ஆண்ட்ரூஸ் என்பவர் சில மாதங்களுக்குமுன்பு ஆஸ்திரேலியா, ஜாவா, மலாய் முதலான நாடுகளுக்குச் சென்றிருந்தார். அவர் திரும்பிவந்ததும், அங்கு இந்தியர்கள் குடியேறுவதனால் உண்டா

கும் தீமைகளையும் கஷ்டங்களையும் நமது தேசத்தில் ஆங்காங்குப் பிரசங்கம் செய்து வருகிறார். இவர் மேற்குறித்த விஷயத்தைப் பற்றி ஸமீபத்தில் சென்னையில் பிரசிங்கித்த போது, சில அரிய விஷயங்களை வெளியிட்டார். ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பு இந்தியா மிகவும் நாகரிகம்வாய்ந்த தேசமாயிருந்ததென்று பேசியபோது அவர் குறிப்பிட்டதாவது :—

"நான் ஆஸ்ட்ரேலியா, ஜாவா, முதலான இடங்களுக்கு யாத்திரை செய்துகொண்டிருக்கையில், இந்தியர்கள் அங்கு ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பு சென்று ஸ்தாபித்த மேன்மையான உருவச்சிலைகளைக்கண்டு ரொம்பவும் ஆச்சரியமடைந்தேன். அவற்றின் வேலைகள் மிகவும் பாராட்டத்தக்கவையாகவே யிருந்தன. அக்காலத்தில் இந்தியர்கள் நாகரிகத்தைப் பரவச்செய்வதற்காகவே அவ்விடங்களுக்குச் சென்றிருந்தனர். இவ்விஷயமானது இந்தியர்கள் அப்பொழுது நாகரிகத்தில் எவ்வளவு மேன்மையுற்றிருந்தார்கள் என்பதை நன்கு விளக்குகின்றது."

இந்தியர்களின் மேன்மையைப்பற்றி மிஸ்டர் ஆண்ட்ரூஸ் மேற்கண்டவாறு பேசிவிட்டு, அவர்கள் அவ்விடங்களில் அனுபவித்து வரும் பலவித அசௌகரியங்களைக்குறித்தும் விரிவாகப் பேசினார். அவ்விஷயங்களை நாமும் கவனித்து அவற்றை ஒழிக்க முயலவேண்டுவது நமது கடமையாகும்.

**சிறுவர்கள் புகைக்குடித்தல்.**

சிறுவர்கள் புகைக்குடிப்பதானது நமது தேசத்தில் நாளுக்குநாள் அதிகமாய்க்கொண்டே வருகின்றது. முக்கியமாய்ச் சிறுவர்கள் புகைக்குடிப்பது பீடி என்பதும், சிகரேட் என்பதுமேயாகும். பீடி என்பதில் உள்ளே கொஞ்சம் புகையிலையும், மேலே கனத்த இலையும் சுற்றப்பட்டுள்ளது. சிகரேட்டுகள் ஐரோப்பாவினின்று வருவன. அவை அழகான காகிதத்தில் சுற்றப்பட்டுப்பார்வைக்கு இனிமையாயிருக்கின்றன. இந்தியச்சிறுவர்கள் இவற்றை வாங்கிப் புகைக்குடிக்கிறார்கள். இதனால், அவர்களின் தேகஆரோக்கியமானது நாளுக்குநாள் கெட்டுவருகின்றது. வங்காளத்துச் சட்டசபையார் சிறுவர்கள் புகைகுடிக்கக் கூடாதென்று ஓர் சட்டம் செய்திருக்கிறார்கள். சிறுவர்கள் புகைக்குடிப்பதனால் ஏராளமான பணம் செலவாகின்றன இவற்றைப் பிள்ளைகளின் தேக ஆரோக்கியவிஷயமாய்ச் செலவிட்டால், மிகுந்த நன்மை உண்டாகுமென்பதில் ஐயமில்லை. நமது மாகாண கவர்ன்மெண்டாரும் இதைக் கவனிக்கவேண்டும்.

---

## Scout Boys.

BY MR. N. S. SUBRAMANIAN.

## 'ஸ்கௌட்' சிறுவர்கள்.

பழுக்கக்காய்ந்த இரும்புதான் வேலைக்கு உபயோகப்படும். ஆறிக்குளிர்ந்துவிட்டால், அதை நம் இஷ்டம்போல அடித்து நல்ல ஸாமானாகச்செய்ய முடியாது. சிறுவர்களின் மனது பழுக்கக்காய்ந்த இரும்புக்குச்சமானமாகும். சிறுபிராயத்திலேதான் அவர்களுக்குக் கீழ்ப்படிதல், நாணயம், ராஜபக்தி, தெய்வபக்தி முதலான நற்குணங்களைப் போதித்தல் சாத்தியமாகும். அப்படி போதிக்கப்பட்ட சிறுவர்கள் சிறந்த நற்குணமுள்ளவர்களாகித் தத்தம் கடமைகளைச் செய்வார்களென்பதில் ஐயமில்லை.

பால்யத்தில் திருந்தாத மனம், பிறகு ஒருநாளும் திருந்தாது. பால்யம் தவறினால், பிறகு மனமானது ஆறிக்குளிர்ந்த இரும்புக்குச்சமானமாகி வேலைக்கு உதவாமற் போய்விடும்.

மற்றொரு விஷயம். பால்யத்தில் ஊக்கம். ரக்தம், திமிர் இவை மிதமிஞ்சி இருக்கும்; அவற்றைச் சரியானவழியில் செலவிட்டால்

நன்மை உண்டாகும். அத்தகைய வழியைக் காண்பிப்பது நமது கடமையாகும். எவ்வளவோ சிறந்த மூளைகளும் மேலான சக்திகளும் தப்பான மார்க்கத்தில் செலவழிக்கப்பட்டதனால், அவை வீணாய்ப்போயும், அநேகம் கெடுதிகளை உண்டுபண்ணியும் இருக்கின்றன. துஷ்டப்பிள்ளைகள் வெகுவாய் மிகுந்த புத்திசாலிகள். அவர்களின் புத்தி துஷ்டத்தனத்தில் செலவிடப்பட்டு, அதில் அவர்கள் தேர்ந்தவர்களாகிறார்கள். அவர்களுக்கு வேறுவிதமானதும், உபயோகமானதும், வேடிக்கையானதுமான சில வழிகளைக் காண்பித்தால், அவர்கள் துஷ்டச்செய்கைகளைவிட்டு நற்குணமுள்ளவர்களாவதுடன், பற்பல விஷயங்களையும் அறிந்துகொள்ளுவார்கள். 'இங்கிலண்டில் பள்ளிக்கூடங்களில் இப்படிப்பட்ட கெட்டிக்கார துஷ்டப்பிள்ளைகளைக்கண்ட ஸர் ராபர்ட் பேடன் பவெல் என்பவர், இவர்களின் புத்தியை ஸன்மார்க்கத்தில் திருப்ப ஒருவழியைத் தேடவேண்டுமென்று எண்ணினார். சுமார் 10 வருஷங்களுக்குமுன் அதற்காக 'ஸ்கௌடிங்' என்னும் ஒருவிஷயத்தை ஆரம்பித்தார். 11 வயது முதல் 18 வயது வரையில் உள்ள எல்லாச் சிறுவர்களும் அதில் சேரலாம். பரோபகாரம் செய்யவேண்டும் என்பது 'ஸ்கௌட்டுகளின்' பிரதமவிதி. ஒவ்வொரு ஸ்கௌட்டும் தினந்தோறும் ஒரு உபகாரமாவது பிறருக்குச் செய்யவேண்டும். ஸ்கௌட்டுகளுக்கு, பிறருக்கு உபகாரஞ்செய்ய ஹேதுவாயிருக்கும் பொருட்டு சில முக்கியமான விஷயங்கள் போதிக்கப்படுகின்றன. 'பர்ஸ்ட் எய்ட்' என்று சொல்லப்படும் முதற்சிகிச்சை ஒவ்வொரு ஸ்கௌட்டுக்கும் தெரியும். 'ட்ராகிங்' என்று சொல்லப்படும் ஊகித்தறிதல் மிகவும் முக்கியமானது. கால்நடைகள் அல்லது குழந்தைகள் வழிதவறிவிட்டால், அவைகளின் அடிகளைத்தொடர்ந்து சென்று கண்டுபிடிப்பதற்கு "ட்ராகிங்" வெகு அநுகூலமாயிருக்கும். இன்னும், 'ஸிக்னலிங்' பறவையினம், மிருகங்கள் இவைகளின் இயற்கையை அறிதல், வீடுகளில் நெருப்புப்பற்றினால் அதையவிக்கும்வழி, அந்த வீட்டிலுள்ள ஜனங்களைத் தீயினின்றும் அப்புறப்படுத்திக் காப்பாற்றும் வழிகள், தண்ணீரில் மூழ்கினவனுக்குச் செய்யவேண்டிய சிகித்ஸைகள், தண்ணீரில் தத்தளித்துக்கொண்டிருப்பவனைக் கரையில் கொண்டுவந்து சேர்க்கும் வழிகள், குடிசை கட்டுதல், கயிறுகளாலும் மூங்கில்தடிகளாலும் பாலங்கட்டுதல் முதலிய பிள்ளைகளின் மனத்திற்கிசைந்ததும் உபயோகமுள்ளவையுமான பலவிஷயங்களும் அவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன. பிள்ளைகள் இவ்விஷயங்களை மிக்க உத்ஸாகத்துடன் கற்றுக்கொள்வது இயற்கை. வெளியில் வராமல் உள்ளேயே உட்கார்ந்து கொண்டு, எப்போதும் புஸ்தகமும் கையுமாக இருந்து, உடம்பைத் துரும்புபோலாக்கிக்கொண்டு பலஹீனர்களாயிருக்கும் நம் தற்காலப்பிள்ளைகளுக்கு, 'ஸ்கௌடிங்' மூன்று விதங்களில் நன்மைபயக்குகின்றது. முதலாவது: வெளியில் ஸஞ்சரித்து நல்ல பிராணவாயுவை உட்கொண்டு, தேக ஸௌக்கியத்தையடைகிறார்கள். இரண்டாவது: மனது குறுகி மெலிந்து போகாமல், விசாலமாகிப் பல விஷயங்களையும் அநுஷ்டான பூர்வமாகக் கற்றுக்கொள்ள அவர்களுக்கு இடமேற்படுகின்றது. மூன்றாவது: நல்ல குணமுள்ளவர்களாயும், பரோபகாரிகளாயும் ஆகிறார்கள்.

சென்ற பத்து வருஷங்களுக்குள் 'ஸ்கௌடிங்' எல்லா நாகரிக தேசங்களிலும் பரவிவிட்டது. அதற்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு. அது சென்ற விடங்களிலெல்லாம் மேன்மையைப் பெற்றிருக்கின்றது. அமெரிக்கா ஐக்ய மாகாணங்களில் மட்டும் 250,000 ஸ்கௌட்டுகளுக்கு மேல் இருக்கிறார்கள். தேச நன்மைக்காக உழைக்கும் விஷயங்களுள் ஒன்றென்று சட்ட பூர்வமாக அமெரிக்காவில் இது அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. ந்யூஸிலண்ட் என்னும் ஒரு சிறிய தேசத்தில்கூட 20,000 'ஸ்கௌட்டுகள்' இருக்கின்றார்கள். இத்தகைய நன்மை பயக்கக்கூடிய முயற்சியானது இந்தியாவிற்கு அவசியமன்றோ!

ஜி. எஸ். சுப்பிரமணியன்.

# Sir Jagadish Chandra Bose.

(A LIFE SKETCH.)

BY MR. N. R. KEDARI RAO, M.A., L.T.,

## ஸர் ஜகதீஸ சந்திர போஸ்.

நமது ஜகதீச சந்திரபோஸுக்கு இவ்வளவு பெயரும் கீர்த்தியும் வருவதற்குக் காரணம் என்னவென்று இனிக் கவனிப்போம். அனாதி காலந்தொட்டு உலகத்திலுள்ள வஸ்துக்கள் எல்லாவற்றையும் ஸ்தாவரம், ஜங்கமம் ஆகிய இந்த இருபிரிவுகளுக்குள் அடக்கி வந்து கொண்டிருந்தார்கள். ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் தானாக அசையும் சக்தி உள்ளவைகளே ஜங்கம வஸ்துக்களென்றும், அப்படித் தானாகவே அசையும்சக்தி இல்லாதவைகளை ஸ்தாவர வஸ்துக்களென்றும் எண்ணியிருந்தார்கள். உதாரணமாக: செடி, கொடி, மரம், மட்டை முதலியன ஸ்தாவர வர்க்கத்தைச் சேர்ந்தனவென்றும், ஆடுமாடு முதலிய ஜந்துக்கள் ஜங்கமவர்க்கத்தைச் சேர்ந்தனவென்றும் எண்ணியிருந்தார்கள். தவிரவும், இவ்விரு வர்க்கங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் பலவென்றும், ஜந்துக்களுக்குள்ள உணர்ச்சி என்பது செடிகொடிகளுக்கு இல்லை என்றும் கருதியிருந்தார்கள். மிருகங்களை அடித்தால், இந்த உணர்ச்சியினால் அவை வருந்துகின்றன. மனிதனைக் கிள்ளினால் அவன் கத்துகிறான். அவ்விதமே ஒரு மரத்தை வெட்டினாலும் சரி, கிள்ளினாலும் சரி, அடித்தாலும் சரி அது பேசாமலிருப்பதனால், அதற்கு உணர்ச்சிச் சக்தி இல்லை என்று தீர்மானம் செய்திருந்தார்கள்.

ஆயினும், செடிகளிலும் சிலவற்றைத் தொட்டால், அவை உடனே சுருங்கிவிடுகின்றன. சாதாரணமாய் 'தொட்டாற் சுருங்கி' என்னும் இலையை நாம் பலதரமும் பார்த்திருக்கிறோம். அதைத் தொட்டவுடனே அது சுருங்கிவிடுகின்றதல்லவா? இதன் காரணமென்னவென்று சாஸ்திரிஞர்கள் பலரும் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். சிலர் மனிதனைப்போல் இச்செடிக்கும் உணர்ச்சிச்சக்தி உண்டு என்றார்கள். அப்படி உணர்ச்சிச்சக்தி இருந்தால், "அதற்கு நாம் மயக்கம்கொடுத்தால் அது மயங்கி விழுந்துவிடுகிறதா?" என்று சிலர் கேட்டார்கள். உணர்ச்சியிருந்தால், தொட்டாற்சுருங்குவதேயல்லாமல், மயக்கம்கொடுத்தால் மனிதனைப்போல் அதுவும் மயங்கி விழுந்துவிடவேண்டும். சந்தோஷமாயிருக்கும்போது உத்ஸாகமாயும், வேலையால் களைப்படைந்தபோது சோர்ந்தும் இருக்கவேண்டும். இவ்விதமெல்லாம் இருக்கின்றனவா பார்ப்போம் என்று எண்ணி பெப்பர் என்ற மேல்நாட்டறிஞர் ஒருவர் (Peffer) சில சோதனைகளைச் செய்துபார்த்தார். மனிதனுக்கு "க்ளோரோபாரம்" (Chloroform) என்ற மயக்கத்தைக் கொடுத்தால் அவன் சோர்ந்து விழுகிறான்; அப்படியே இச்செடி சோர்வடைகிறதாவென்று பார்த்தார். "க்ளோரோபாரத்தைத்" தண்ணீரில் கரைத்து அதைச் செடியின்பேரில் தடவினதில், அது சோர்வடைந்ததாகத் தோற்றவில்லை. ஆகையால், பெப்பர் "இச்செடிக்கு உணர்ச்சி என்பதேயில்லை" என்று எண்ணினார். ஆயினும், "தொட்டால் அது ஏன் சுருங்குகிறது" என்பதற்குப் பின்வரும் பதிலை அளித்தார்: "சாதாரணமாய் ரப்பர்குழாயில் தண்ணீரை ஊற்றி, அக்குழாயின் ஒரு பாகத்தை அழுத்தினால், மற்ற இடத்திலும் அதற்குத் தகுந்த மாறுபாடு எப்படி உண்டாகிறதோ அப்படியே இச்செடியிலும் நாம் தொட்டவுடனே அது சுருங்குகிறது. அவ்வளவே தவிர, இச்செடிக்கு உணர்ச்சிச்சக்தியேயில்லை" என்றார்.




இவற்றில் A B என்பது தண்ணீரால் நிரப்பப்பட்ட ரப்பர்குழாய். இதில் D என்பது பிஸ்டன் (Piston). இந்த ரப்பர் குழாயை C என்ற இடத்தில் அழுத்தினால், D என்ற பிஸ்டன் வெளியே வந்து E என்ற வஸ்துவின்பேரில் மோதும். இதை நாம் ஸகஜமாய் அறியலாம். இப்படியே 'தொட்டாற் சுருங்கி' என்ற செடியிலும் நடக்கிறது என்று அவர் ஸ்தாபித்திருந்தார்.

ஆயினும், நமது போஸூக்கு இது ஸரியானது என்று புலப்படவில்லை. இவ்விஷயத்தைத் தாமே ஆராய ஆரம்பித்தார். நமக்கு 'க்ளோரபாரம்' கொடுத்தால், அதன் ஆவியானது நமது நரம்புகளுக்குச் சென்று அவைகளின் உணர்ச்சியை நிறுத்திவிடுவதனால்தான் நமக்கு ஒன்றுந் தெரியாமல் உணர்ச்சியற்றவர்கள்போலக் கிடக்கிறோம். பெப்பர் செய்த சோதனையில் பல பிசகுகள் இருக்கலாம். ஒரு செடியை க்ளோரபாரம் தண்ணீரில் நனைத்தவுடனே, அந்த மயக்கம் நரம்புகளுக்குச் செல்லாமலிருந்திருக்கலாம். சதையின் மத்தியிலிருக்கும் நரம்புக்கு மயக்கங்கொடுப்பது எளிதான காரியமன்று. ஆகையால் அதே சோதனையை நாம் மறுபடியும் செய்து பார்ப்போம் என்று துணிந்தார்.

பருமனான செடியைச் சோதனைசெய்வது கஷ்டமாதலால், மெல்லியதான இலையைச் சோதனை செய்ய முயற்சித்தார். இவருடைய ஆலோசனைகளின் விவரங்களாவன:—"இந்தியா ரப்பருக்கு உணர்ச்சி இல்லாததனால் அதை அமுக்கினாலொழிய பிஸ்டன் வெளியே வர வழியில்லை. ஒரு வஸ்துவுக்கு உணர்ச்சியிருந்தால், அது விஷத்தால் கஷ்டப்படும்; இருட்டில்வைத்தால் சோர்வடையும்; அதிக வேலைசெய்தால் களைப்பார வேண்டிவரும்; சீதோஷ்ணஸ்திதியை வெகுவாய் மாற்றினால், அதற்குத்தகுந்த மாறுபாடுகள் தெற்றென விளங்கும். இவையெல்லாம் இச்செடியில் இருக்கின்றனவா இல்லையாவென்று பரிசோதனை செய்வோம்" என்று தம் செடியைப் பரீக்ஷைக்கு உட்படுத்தினார்.



தொட்டாற் சுருங்கி என்னும் செடி இப்படத்தில் காண்பிக்கப்பட்டிருக்கின்றது.

1. செடி எப்போதும் இருக்கும் மாதிரி.

2. நாம் அதைத் தொட்டால், இலை சுருங்கியிருக்கும் மாதிரி.

.........நரம்புகள் இருக்கும் இடம்.

இச்செடியைப் பரீக்ஷைக்கு உட்படுத்துவதென்றால், சுலபமான காரியமா? அதற்கு உணர்ச்சி உண்டா இல்லையா என்பதை அறிவதற்கு மார்க்கம் என்னவென்று பலநாட்கள் அவர் யோசித்துக் கடைசியில் தமது "ரிஸொனெண்ட் ரிகார்டர்" (Resonant Recorder) என்ற அற்புதக்கருவியை ஏற்படுத்தினார்.




இதன் மர்மத்தை அறிவது அரிதன்று. தொட்டாற் சுருங்கி என்றஇலையை K என்ற பட்டுநூலில் கட்டிவிட்டு அந்நூலை V என்ற லீவரோடு சேர்த்துவிட்டால், இலை சுருங்கும்போது நூல் தாழ்ந்துவிடும். தாழ்ந்ததும், W என்ற கையானது G என்ற கரிதீத்த கண்ணாடியில் தேய்ந்துகொண்டேவரும். இக்கண்ணாடியை ஒரேமாதிரியாய்த் தாழ்த்திக்கொண்டுவந்தால் a b c முதலிய கீரல்கள் கண்ணாடியில் தோன்றும். இதில் சோதனை என்னவென்றால்:—முதலில் இலைகளைச் சும்மாவைத்திருந்து கண்ணாடியைத் தாழ்த்திக்கொண்டுவரவேண்டும், பிறகு மின்சாரத்தைக்கொண்டு இலைகளை மூடிக்கொள்ளும்படி செய்வதனால் உண்டாகும் வேறுபாட்டைக் கண்டுபிடிப்பது சுலபமாகும். S R P E முதலியவைகள் மின்சாரக் கருவிகள். நாம் ஒரு ஜந்துவைத் தொட்டதும், அது உணர்வதற்குக் கொஞ்சநேரம் செல்லுகின்றதன்றோ? அப்படியே இச்செடிக்கும் உணர்ச்சி உண்டாவதற்குக் கொஞ்சநேரம் ஆகின்றது. அதுவரையிலும் a b ஆகிய நேர்கோடு தெரியும். உணர்ச்சியுண்டானதும் இலைகள் சோர்வடைவதனால், b c என்ற கோடு வளைந்து தெரிகிறது. பரீக்ஷைசெய்ததில், இச்செடியை நாம் தொடுவதற்கும், அவ்வுணர்ச்சி அதற்குத் தெரிவதற்கும் மத்தியில் எவ்வளவுகாலம் ஆகிறது என்பதை a b என்பதனின்று அறியலாம். நேரில் பரிசோதித்ததில், இக்காலம் ஒரு ஸெகண்டில் பத்தில் ஒருபாகத்துக்குக் கொஞ்சம் மேலாயிருக்கிறது (·109 Second.)

இதனின்று இச்செடிக்கு உணரும்சக்தி உண்டென்று தெளிவாய்த்தெரிகின்றதல்லவா? ஆயினும், நமது போஸுக்கு இச்சக்தியைப் பற்றி மேலும் மேலும் அறிய அவா உண்டாயிற்று. செடியின் உணர்ச்சி சீதோஷ்ணத்தினால் மாறுமா என்று ஆலோசனை செய்துபார்த்தார். ஆகவே செடியை உஷ்ணப்படுத்தியும், குளிர்வித்தும் மேற்சொன்ன பரீக்ஷையைச் செய்தார்.




செடியைச்சற்று உஷ்ணத்துக்குட்படுத்தினவுடனே, அதன் உணர்ச்சிச்சக்தி அதிகமாய் விடுவதும், சீதளப்படுத்தினவுடன் சக்தி குறைவதும் கண்டு அவர் ஆச்சரியப்பட்டார்.

1. சீதளம்.
2. கொஞ்சம் உஷ்ணம்.
3. அதைப்பார்க்கிலும் உஷ்ணம்.

இன்னும், செடியை அதிக உஷ்ணத்துக்குட்படுத்தியதனால் அது செத்துப்போய்விடுவதையும், உணர்ச்சிச்சக்தியைக் காண்பிக்காமலிருப்பதையும் கண்டு அவர் வியந்தார்.

இம்மாதிரி பலவித சோதனைகளைச் செய்து, செடிகொடிகளுக்கும் மிருகங்களுக்கும் உணர்ச்சியில் வித்தியாஸமேயில்லையென்று அவர் நன்றாக ஸ்தாபித்தார்.

சில சாஸ்திர அறிஞர்கள், 'தொட்டாற்சுருங்கி' என்ற செடியில்மாத்திரம் இப்படியிருக்கும், மற்றவைகளில் இல்லை என்று சொல்லுவார்கள் என்பதை இவர்முன்னறிந்து, புளிச்சை இலை முதலான பலவகை இலைகளையும் சோதித்துத் தாம் உணர்ந்த விஷயம் மெய்தான் என்று சித்தாந்தம் செய்தார்.

இவ்விஷயத்தின் அருமையை நாம் என்னென்று போற்றுவது! இதுவரையிலும் உயிரில்லை என்று நினைத்திருந்த செடிகொடிகளுக்கு உயிருண்டென்றும், நம்மைப்போல் அவைகளும் சுகதுக்கங்களுக்குத் தக்கவாறு மாறுபாடுகளடைகின்றனவென்றும், காற்றும் வெளிச்சமும் நமக்கு எப்படி அவசியமோ அப்படியே அவைகளுக்கும் அவசியமென்றும் இவர் தம் அற்புதக் கருவிகளைக்கொண்டு காட்டியுள்ளார்.

இவ்விஷயங்களைப்பற்றி இவரே சில சமயங்களில்: "இவ்வளவு காலமாய் மிருகங்களுக்குத்தான் உயிருண்டென்றும், செடிகளுக்கு அது இல்லை என்றும் எண்ணியிருந்தோமே. பல ஆண்டுகளுக்கு முன்னமேயே நமது முன்னோர்கள் இவ்விஷயத்தைத் தெளிவாய் உபனிஷத்துக்களில் உபதேசித்திருக்கிறார்களே" என்று எண்ணி நமது ஆன்றோர் பெருமையை விளக்கியிருக்கிறார்.

"ஜந்துக்களிலும், மிகவும் சிறியதாகவுள்ள மரம் முதல் விசாலமான ஆலமரங்கள் வரையிலும், மனிதனிலும், மற்றெவ்வகைப் பொருட்களிலும் உள்ள உயிரைத் தன்னுயிராகக் கருதுபவன் எவனோ அவன்தான் சாஸ்திரஞானி; மற்றெல்லோரும் அறியாதார்" என்று கங்காநதி தீரத்திலிருந்து சொல்லிய இருடிகளின் மொழிகள் எவ்வளவு மெய்யுடைத்து" என்று நமது போஸ் மெச்சியிருக்கிறார்.

என். ஆர். கேதாரிராவ், எம்.ஏ; எல்.டி

---

## New Sonnets in Tamil.

BY MR. V. SUBBA AIYER.

## தமிழ் நவீனப் பாசுரங்கள்.

26. தெலுங்கு.

நிலைமண்டில வாசிரியப்பா.

'தெலுங்கோ வல்லது தேனோ?' வென்று
பலமொழி யுணர்ந்தவர் பகர்வது சாதம்;
அன்னதின மொழியினை யாய்ந்திடா மாந்தருஞ்
சின்னதா மோர்க்ருதி செவியுட் புகுதலுங் [லுங்
தம்மனங் குளிரத் தலைகளை யசைத்தே
'ஹா! ஹா!! ஹா! ஹா!! பேஷ்! [பேஷ்!!' என்று
தங்களி துளக்களி காட்டுவ ரென்பதிற்
சந்தேக முமிலை; சாற்றிடி லந்தப்
பாஷையி லுள்ள பத்யமுங் கத்யமும்
வடமொழி போன்ற வளமுடன் வயங் [கும்:
பாண்டியின் மன்னனைப் பண்புடன் [பெற்றனள்,
ஆண்டவ னருளை யடைந்தபே ரின்றனள்,
மண்ணுயிர் காக்க வல்லவ ரீந்தபின்
என்னையும் பெற்றென விளங்கெலுங் [கணங்கே.

---

### 27. வாழை.

நேரிசை யாசிரியப்பா.

வாழை யெனப்படும் மரந்தனை யறியார்
இத்தே சத்தினு மிருப்பரோ வறியேம்;
ஆயினு மதுதரு மிலையுங் காயுந்
தண்டும் நாருந் தரையுள வர்க்கு
நித்தமு முதவியாம் நேர்மை நினைந்தே
இங்கே சற்று எழுதத் துணிந்தேம்;
பெரிய வாழை யீன்ற கன்றினைப்
பெயர்த்தே வைத்த வருட மொன்றிற்
குலையாய்க் காய்களைக் கொடுத்து நிற்கும்:
வாழை மரந்தான் வளர்ந்திட வேண்டில்
ஈர மூலமா திருத்தல் வேண்டும்:
வாழைய டிவாழை வளருதல் போல
நீவிரும் பத்தியை நிலையாய்
அடைந்திடக் கடவுளி னடிதொழு மின்
[றே.

---

### 28. வாழை.

(தொடர்ச்சி)

நேரிசை யாசிரியப்பா.

வழையி லநேக வகையுள தறிந்திடும்;—
மொந்தன் கதலி யெனப்படு மிருவகை
எந்த விடத்திலு மிருப்பது சகசம்;
பேய னென்றவோர் விதமாங் காயின்
மேலெலாஞ் சாம்பல் நிறமே காணும்,
இரசதா ளியெனு மின்னொரு வகையோ
இனிப்பு மிகுந்தே யிருக்கும் மற்றுச்
சிறுமலை தன்னிலோர் சிறந்த வாழை
தந்திடுங் கனியைப் போல வேறொரு
கனியிலை யென்பதைக் கருத்துட் பதி
[மின்;
அதுவிடிற் சேலஞ் சில்லா மலைகளில்
வளரும் வாழையின் பழங்களு மினிய
[வே:
இவையெலாங் காண்போ ரெங்ஙனம்
அவனை மறுப்பதென் றறைந்திடு மெமக்
[கே.

---

### 29. ஏத்தம்வாழை.

நிலைமண்டில வாசிரியப்பா.

ஏத்தம் வாழை யென்பதோர் மரத்தை
ஏந்தா மென்றும் நேந்தா மென்றும்
வழங்குத லுண்டே யன்னது வளரும்
மலையா ளத்திலு முள்ள மானிடர்:
அதுதான் விளையச் சாற்பாங் கான
நிலமே நன்றுமென்பது தேரும்:
கன்றைப் பதித்த பிறகோர் காலை
வேளையிற் சென்று வாழையை நோக்க
சுதனின் குருத்தின் நுனியிற் றண்ணீர்
திரண்டி ருப்பதைக் காணலாம், பின்னால்
அந்நீ ரிரங்கி வாழைக் குதவும்:
அதன்காய் வறுவலும் மாவுஞ் செய்ய
[லாம்,
அதுதரும் நாரா லாகிய கயிறுகள்
கப்பலுங் கட்ட வலியுடைத் தாகுமே.

---

### 30. பசு.

நிலைமண்டில வாசிரியப்பா.

அரசர் கவரும் அணிநிறைச் செல்வம்
நானில வளத்தை நல்கும் செல்வம்
மானிடர் நோய்க்கு மருந்தாம் செல்வம்
மலர்மகள் மனையில் வாழ்ந்து நிலவிக்
குலமெலாம் நலமுறு குறைவிலாச் செல்
[வம்
எவ்வகைத் தேவரும் இன்புடன் தங்கும்
ஒப்பிலா மெய்யே உன்னருஞ் செல்வம்
அன்னதன் பெருமை அறைகுதல் அரி
[தே
ஆவோ டந்தணர் அமையும் வாழ்க்கை
கோவோ டமையும் குவலயம் செழிக்க
அமலன் ஆடும் ஐவகை நலனும்
ஆவின் பாலே படுமென வறிமின்
பசுமலப் போக்கே ஈதோ பாரென
நீற்றை உடலில் நிறை யணிவீரே.

---

Note:—The right of publishing these sonnets in book form is reserved by the author. But Editors of other journals may publish them provided they send two copies of the issue in which they appear to V. Subba Aiyar, Seetharama Mudali Street, Vellore.

# Indian Women and their Education.

## இந்திய ஸ்திரீகளின் கல்விப் பயிற்சி.

மேற்குறித்த விஷயமாய் ஸ்ரீமதி ஸரோஜினி தேவி கீழ்க்கண்ட கருத்துக்களடங்கிய ஓர் பிரசங்கம் செய்தார். அதன் விவரம் வருமாறு :—

நீங்கள் இந்துஸ்திரீகளின் சிறப்பைப்பற்றிப் பேசும்பொழுதெல்லாம், பூர்வகாலத்திலிருந்த சாவித்ரியை உதாரணமாகச் சொல்லுகிறீர்கள்; அவளுடைய பயபக்தியையும், ஸாஹஸத்தையும் எடுத்துக்கூறுகிறீர்கள்; அவளுடைய நற்குணங்களினாலும், விடாமுயற்சியினாலும் அவள் தன் புருஷனுடைய உயிரை யமபுரியினின்றும் மீட்டதை வியந்துகொண்டாடுகிறீர்கள். அப்படிப்பட்ட நீங்கள் இக்காலத்து சாவித்ரிகளென்ன விளங்கக்கூடிய உங்கள் ஸ்திரீகளை எந்த நிலைமையில் வைத்திருக்கிறீர்கள்? உயிர்ப்பிக்கும் ஆற்றல் சாவித்ரிக்கு உண்டென்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்கள். அந்த ஆற்றல் அவளுக்குத் தனக்குத் தானாகவே வந்து அமைந்ததோ? கல்விப்பயிற்சியினாலும் நற்பழக்கங்களினாலுமே அவளுக்கு அந்தத் திறமை உண்டாயிருக்கவேண்டுமல்லவா?



ஸ்ரீமதி ஸரோஜினி தேவி.

இந்நாளில் தேசீய உணர்ச்சி என்பது நசித்துப்போயிருக்கின்றது. தேசீய உணர்ச்சியாவது நமது தேசத்துப் பொதுநலத்தை நாடி உழைக்கும் எண்ணம். இந்த உணர்ச்சி இப்பொழுது இந்தியாவில் மாண்டுபோயிருக்கின்றது. மாண்டதை உயிர்ப்பிக்கும் ஆற்றல் சாவித்ரியைப்போன்ற ஸ்திரீகளுக்கே உள்ளது. அப்படிப்பட்ட உங்கள் ஸ்திரீகளுக்கும் அந்தத் திறமை வாய்ப்பதற்கு வேண்டிய அனுகூலங்களையும் பழக்கங்களையும் அவர்களுக்கு நீங்கள் அமைத்துக்கொடாதிருப்பது தர்மமாகுமா?

இக்காலத்து இந்தியப்பெண்கள் தங்கள்மூதாதைகளை நாகரிகமற்ற கிழங்களெனக் கடிந்து தள்ளுகிறார்கள். அவர்களை அப்படி அவமதிப்பது தகாது. அம்மூத்தோரே புத்திச்தேர்ச்சியிருந்தவர்கள். அவர்களுடைய நோக்கங்களே சிறந்தவைகள். இக்காலத்துப் பெண்களுக்கு மேனாட்டு நாகரிகத்திற்கிசைந்த வெளித்தோற்றப் பதமையுமில்லை; கீழ்நாட்டு நாகரிகத்திற்கு அறிகுறியான மனக்கிளர்ச்சியும் குணாதிசயங்களும் இல்லை. கவிவாணரொருவர் கூறியபடி, "இவ்வுலகத்து நற்குணமில்லை, அவ்வுலகத்திற்கேற்ற குணமுமில்லை" என்று சொல்லலாம்.

ஸ்திரீகளுக்குஸ்வபாஷையின் மூலமாகவேகல்வி புகட்டவேண்டும். முற்காலத்து ஸ்திரீகளைப்போன்று அவர்கள் குடித்தனத்தலைவிகளாவதற்கு வேண்டியவாறு அவர்களுக்குக் கல்வி கற்பிக்கவேண்டும். இதுவே தேசீயக் கல்வி யெனப்படும். இத்தேசத்தவர் முன்னுக்கு வருவதற்கு மூலகாரணம் தெய்வபக்தியும் மதப்பற்றுமேயாகும். இந்தத் தத்துவங்களை வற்புறுத்துங்கல்வியே தேசீயக்கல்வி. இந்தியாவின் அபிவிருத்திக்கு இந்தத் தேசீயக் கல்வி இன்றியமையாததாகும்:—இந்துநேசனில்

T. R. S.

## Castor Cultivation.

By Pandit V. Subramania Iyer.

## ஆமணக்குப் பயிர்செய்தல்.

(306-ம் பக்கத்தொடர்ச்சி.)

### ஆற்றுப்படுகை ஆமணக்கு.

கொள்ளிடம்போன்ற நதியோரமுள்ள படுகைகளில், மார்கழி மாதம் பிறந்ததும் ஏர்கட்டி உழுது ஆமணக்கு விதையைப் போடுவார்கள். ஒருகாணி விஸ்தீர்ணமுள்ள நிலத்திற்கு 4-படி (பட்டணம்படி) விதை விதைக்கப் போதுமானது.

இக்கொட்டைமுத்துச் சாகுபடியின் இடையில் சொற்பகாலப்பயிராகிய எள், கேழ்வரகு, காராமணி முதலியவற்றைப் பயிர்செய்து பலன் பெறுவதுமுண்டு. கொள்விதைத்தால், அதன் கொடிகள் ஆமணக்கின்மேல் படர்ந்து காய்க்கும்.

இப்படுகைக் கொட்டைமுத்துக்குத் தண்ணீர் பாய்ச்சவேண்டிய அவசியமில்லை. இப்பயிர் அடியிலுள்ள ஆற்றுவண்டலின் ஈரத்தைக்கொண்டே செழித்து வளர்கின்றது.

ஆமணக்குப் பயிருடன் செய்யப்பட்ட எள் முதலிய பயிர்கள் பலன்கொடுத்து முடிவதற்கும், ஆமணக்குப்பயிர் பலன் கொடுக்கத் தொடங்குவதற்கும் காலம் ஒற்றுமையாயிருக்கும். இது ஆனி மாதம்வரை நல்ல பலனைக் கொடுத்துவருகின்றது. ஆற்றுப்படுகையில் செய்யப்படும் பயிரில் ஜலம் ஏறாமலிருந்தால், அது வருஷமுழுதும் பலன் கொடுத்துக்கொண்டிருக்கும்.

ஆமணக்கை வியாபாரப் பொருளாக வர்த்தகர்கள் பிடித்து நாநாதேசங்களுக்குக்கொண்டு போய் வியாபாரம் செய்கிறார்கள். கொட்டைமுத்துக்கள் ஏராளமாக செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுத்தும் வியாபாரம் செய்யப்படுகின்றது. ஆமணக்குக்கொட்டையைச் சுட்டு வண்டிமை செய்து இயந்திரங்களுக்கு உபயோகிக்கப்படுகின்றது. இந்த எண்ணெயைச் சுயமாகவும், கடலைக்கொட்டை எண்ணெயோடு கலந்தும் விளக்கெரிக்க உபயோகிக்கிறார்கள். இப்படிப்பட்ட கலப்பெண்ணெயை உபயோகித்தால், விளக்குப் பிரகாசமாயும் நின்றும் எரியும்; விளக்குத்திரியை அடிக்கடி தூண்டிக்கொண்டிருக்க வேண்டியிராது. விளக்கெண்ணெயில் வேறு ஒன்றையும் கலக்காமல் சுயமாக உபயோகித்தால், விளக்குக் கொஞ்சம் மங்கலாய் எரியும். ஆனால், இவ்விளக்குக் கண்ணுக்கு மிகுதியும்குளிர்ச்சியை உண்டுபண்ணுவதனால், இது பிரஸவ அறைகளில் பெரிதும் உபயோகப்படுத்தப்படுவதுண்டு. இன்னும், வியாதிஸ்தர் இருக்கும் அறைகளிலும் இந்த விளக்கை உபயோகிப்பது நல்லது. காய்ச்சின விளக்கெண்ணெய் தேகத்திற்கு மிகுதியும் ஆரோக்கியத்தைக் கொடுக்கும். ஆகவே, இதை குழந்தைகளுக்கும் வியாதிஸ்தர்களுக்கும் விரேசனத்திற்காக கொடுக்கப்படுவதுண்டு.

இயந்திரங்களில் கொடுப்பட்டு சாஸ்திரமுறையில் குளிர்ச்சி செய்யப்பட்ட எண்ணெய், கண்ணாடி குப்பிகளில் அடைக்கப்பட்டு கடைகளில் விற்பனைக்குக் கிடைக்கின்றது. இன்னும், இச்சாஸ்திர முறைப்படி தயாரித்த எண்ணெயைப் பரிசோதித்து ஆஸ்பத்திரிகளில் விரேசன மருந்தாக உபயோகிக்கப்படுகின்றது. இந்த எண்ணெயை உட்கொண்டவர்களுக்குப் பித்த உஷ்ணவாயு முதலான வியாதிகள் நீங்கும்.

புழுக்கிக் காயவைத்து இடித்து அடுப்பிலிட்டு வடித்த எண்ணெயே பெரும்பாலும் குழந்தைகளுக்குப் புகட்டப்படுகின்றது. குழந்தை பிறந்தவுடன் இந்த எண்ணெயை முலைப்பாலில் கலந்து அதற்குப் புகட்டப்படும். இதற்குத்தான் செவ்வெண்ணெய் என்று சொல்லுவார்கள். 'ஆமணக்கெண்ணெய் ஆனை

வளர்க்கும்' என்பது ஆமணக்கைப் பற்றின சாதாரண பழமொழியாகும்.

இந்த எண்ணெய்க்கிருக்கும் குளிர்ச்சியைத் தரும் குணத்தைக்கருதியே, அநேகர் இதைத் தலையில் தேய்த்துக்கொண்டும் ஸ்நாநம் செய்கிறார்கள். கண்வலியினால் கஷ்டப்ப[illegible]வர்கள் இரவு படுத்துக்கொள்ளும்போது இந்த எண்ணெயைக் கொஞ்சம் கண்ணில் கட்டிக்கொண்டால், காலைக்குள் அவர்களின் கண்கள்சுத்தமாகி நல்ல பார்வையை யடைகிறார்கள். ஆமணக்கு எண்ணெயைச் சாப்படுவது சிரமமாயிருக்கும். இதையொட்டியே, "ஆமணக்கு எண்ணெயைச் சாப்பிடவேண்டாம், அம்மா வயிற்றில் பிறக்க வேண்டாம்" என்ற பழமொழியும் வழக்கத்திலிருக்கின்றது.

### ஆமணக்கு இலைகள், கிளைகள்.

ஆற்றுப்படுகைகளில் செய்யப்படும் ஆமணக்குப்பயிரில் வெள்ளப்பெருக்கின் ஜலம் ஏறிவிட்டால், பயிரின் வேர் அழுகி, இலைகள் பழுத்துச் செடிகள் அப்படியே பட்டுப்போகும். ஆகவே, அவை பட்டுப்போவதற்குமுன்னால், கிருஷிகள் அவற்றைப் பிடுங்கிக் காயப்போட்டு அடுப்பெரிக்க உபயோகிப்பார்கள்.

கொட்டை இலைத்தளிர்கள் மிருதுவும் ருசியுள்ளவை. ஆகவே, இவற்றை மாடுகள் மிக்க அவாவுடன் தின்னுகின்றன. இவைகளைத் தின்ற மாடுகள் தாகம் மேலிட்டவையாய், வண்டலாய் ஆற்றில வரும் தண்ணீரையும் உடனே குடிக்கின்றன. அப்போது ருசியுள்ள முத்துக்கொட்டை இலையின் தித்திப்புடன் இந்த ஜலம் உட்சென்றதும், மாட்டின் வயிற்றில் ஏற்கனவேயுள்ள பூச்சி இந்த இலையின் தித்திப்புக்காக அதன் நெஞ்சுவரையில் வந்து அடைத்துக்கொள்ளுகின்றது. அப்போது மாட்டுக்கு மூச்சுவிட முடிவதில்லை; வயிறு பெருத்து, பிறகு பூமியில் விழுந்துவிடுகின்றது. அதற்கு உடனே சிகித்சை செய்யாமற் போனால், ஐந்து நிமிஷ நேரத்திற்குள் இறந்துவிடுகின்றது. ஆனால், முத்துக்கொட்டை இலையை மாடுகள் தின்று கொஞ்சநேரம் கழித்துத் தண்ணீர் குடிக்குமானால், அவை இறப்பதில்லை. மாடுகள் இந்த இலைகளைத் தின்று உடனே தண்ணீர் குடித்து, மேற்கூறியவாறு தொந்திரவுகள் உண்டானால், ஒரு பித்தளைப் பாத்திரத்தில் கொஞ்சம் புளியையும் உப்பையும் கரைத்து உள்ளுக்குக் கொடுத்துவிட்டால், அவை உடனே சௌக்கியமடைகின்றன. ஆகவே, கொட்டைப்பயிரில் மாடுகளை மேய்ப்பவர்கள் மிகவும் ஜாக்கிரதையா யிருக்கவேண்டியது அவசியமாகும். முத்துக்கொட்டை இலை இன்னும் வேறு மருந்துச் சாக்காகவும் உபயோகப்படுகின்றது.

### கோட்டை எடுக்கும் விதம்.

முத்துக்கொட்டை விதைத்து இரண்டுமாத காலமானவுடன், அவை பூத்துக் காய்த்துங் குலைகள் விடுகின்றன. குலை பழுத்ததென்பதற்கு, குலையின் நுனிக்காய் முற்றியிருக்கப் பார்ப்பதே அடையாளமாகும். அப்போது கொட்டைக்குலைகள் ஒடித்துச் சேர்க்கப்பட வேண்டும். அக்காய்களை ஒரு மூலையில் குவித்து மூன்று நாட்கள்வரையில் அவற்றை அவிய வைக்கவேண்டும். பிறகு அவற்றைக் காய வைத்தால், கொட்டைகள் வெடித்து விதைகள் தாமாகவே வெளிப்படும். வெடித்ததுபோக மற்றவைகளைத் தடிகொண்டு அடித்து, பிறகு உமியினின்று விதைகளை புடைத்துப் பிரிக்க வேண்டும்.

### ஆமணக்குப் பயிரில் பூச்சி.

மழை இல்லாமல் வெயில் அதிகமாய்க் காயும் காலங்களில், ஆமணக்குப்பயிரின் இலைகளில் புழுக்கள் உண்டாகும். அவை கருநிறமுள்ளவையாயிருக்கும். முசுக்கட்டை பூச்சிகளைப் போல் அவை தாம் பிறந்த இலையிலேயே வாசஞ்செய்து அதைத் தின்றுவிடும். இப்பூச்சிகளால், செடிகளில் கொட்டையெடுப்பவர்கள் மிகவும் சிரமப்படவேண்டியிருக்கின்றது. இப்பூச்சிகள் பதினைந்து நாட்கள்வரை ஜீவதசையுடனிருந்து பிறகு இறக்கும். அச்சமயம் கழுகுகள் முதலான பக்ஷிகள் அங்குவந்து அவற்றைக் கொத்தித் தின்றுவிடுகின்றன.

பண்டித வி. சுப்பிரமணிய ஐயர்.

# The Lost Will.

By Mr. M. S. Krishnasamy Iyer.

## காணமற்போன மரணசாஸனம்.

### 12-ம் அத்தியாயம்.

ஸுந்தரம்மாள் வைத்தியத்திற்காகக் கல்யாணபுரம் வந்திருந்தபோது, சேஷியம்மாள் ஊரில் இல்லை. ஒரு மாதத்திற்கு முன்பாகவே அவளும், கேசவய்யரும், சாம்பசிவய்யரும் ஸ்தலயாத்திரை புறப்பட்டுவிட்டார்கள். அவர்களுக்கு வழியில் சமைத்துப்போட ஒரு விதவை துணைபோனாள். சேஷியின் பிள்ளையும் அவர்களுடன் போனான். தை பிறந்ததும் திருப்பதிக்குப்போய்ப் பையனுக்கு முடியிறக்க அவர்கள் உத்தேசித்திருந்தார்கள். அதுவரையில் அவர்கள் வெளியூர்களிலேயே சுற்றிக்கொண்டிருந்தார்கள். சாம்பசிவய்யர் மனைவிக்கு சேஷியின் நடத்தைப் பிடிக்காததனால், அவள் ஸ்தல யாத்திரைக்குப் போகவில்லை; தன் பிறந்தகம் போய்விட்டாள். ஸ்தல யாத்திரை புறப்படுமுன் சேஷிக்குக் கடன் அதிகமாயிருந்ததனாலும், அவள் ஊர்சுற்றவும் முடியிறக்கவும் பணம் வேண்டியிருந்ததனாலும் தனது நிலங்களில் இரண்டொன்றை வைத்துக் கடன் வாங்கியிருந்தாள். கடன் கொடுத்தவர்களுள் முக்கியமானவர் நாராயணவாத்தியார். அவர் தனக்குக்கிடைத்துவந்த சம்பளத்தையும், தானும் அனுமேலுவும் திருடிச்சேர்த்த பொருள்களை விற்றுவந்த பணத்தையும் வட்டிக்குவிட்டு நாளடைவில் பணக்காரரானார். இந்த சமயம் அவரிடம் முவ்வாயிரம் ரூபாய் ரொக்கமாக உண்டென்று ஊரார் சொல்லிக்கொண்டார்கள். அதில் அவர் ஆயிரத்தைந்நூறு ரூபாய்வரை சேஷிக்கு நில,த்தின்மேல் கடனாகக் கொடுத்திருந்தார்; மற்ற பணத்தை ஊராருக்குக் கடனாகக் கொடுத்திருந்தார். இதைத்தவிர, அலமேலுவும் தனியாகக் கொஞ்சம் சேர்த்துக் கையில் ஐந்நூறு ரூபாய்வரை வைத்துக்கொண்டிருந்தாள். கேசவய்யருக்கு ஸொத்து சேர்க்கத் தெரியாதென்றாலும், அவரும் சேஷிக்குக் கடன் கொடுத்திருப்பதாகக் கணக்கு ஏற்பட்டிருந்தது.

ஸ்தலயாத்திரை சென்றவர்களுக்குப் பணத்தட்டு ஏற்பட்டால், அதற்காகத் தந்தியடித்தவுடன் பணம் அனுப்பும்படி சாம்பசிவய்யர் சிலரைக் கல்யாணபுரத்தில் நியமித்திருந்தார். அவர்கள் கேட்டபோதெல்லாம் பணம் கொடுத்து சேஷிக்குக் கெடுதிவிளைவிக்கத் தயாராயிருந்தார்கள்.

தைமாதம் பத்துத் தேதியோடு ஸ்தலயாத்திரையும், திருப்பதி முடியும் முடிவுபெற்றது. யாத்திரை போனவர்கள் உடலும் பொருளும் மெலிந்தவர்களாய் ஊர்வந்து சேர்ந்தார்கள். சுந்தரம்மாளுக்கு அப்போது உடம்பு அநேகமாய்க் குணமாகிவிட்டது. நீலகண்டனுக்கும் துரைசாமிக்கும் பரீக்ஷை தேறிவிட்டதென்று ஸமாசாரமும் எட்டிற்று. நீலகண்டன் மேலே படிக்கமுடியாததைப்பற்றி வியஸனமடைந்தான். தான் முதல் வகுப்பில் தேறியதனால், ஒரு ஸமயம் உபகாரச் சம்பளம் பெற்று வாசிக்கமுடியுமென்றிருந்தான். தன் தாயாருக்கு உடம்புகுணமாகவே தான் திருச்சிக்குப்போய் ஸ்காலர்ஷிப் பெற முடியுமாவென்று பார்க்க எண்ணினான். பரீக்ஷை சமாசாரம் தெரிந்தவன்று சாயந்திரம், நீலகண்டன் தன் தாயாரிடம் தன்னுடைய அபிப்பிராயத்தை வெளியிட்டான்.

“எனக்குப் படிக்கவேண்டுமென்ற ஆசையிருக்கிறது. அநேகமாய் எனக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்கும். ஸ்காலர்ஷிப்புப் பணம் சம்பளத்துக்கும் புஸ்தகங்களுக்கும் போதும். சாப்பாட்டுக்குத்தான் யோசிக்கவேண்டியிருக்கின்றது.”

“நான் என்ன செய்கிறதப்பா. நமக்கோ ஆஸ்தியொன்றும் அதிகமில்லை. உன் மாமாவை

இனிமேல் பணத்துக்கு எதிர்பார்ப்பதில் பிரயோஜனமில்லை. சாப்பாட்டுக்குக்கூட அவனிடம் இனி இருப்பது உசிதமல்ல. நீ சீக்கிரம் ஏதாவது ஒரு வேலையைப் பார்த்துக்கொண்டு என்னையும் அழைத்துப்போய்விடு. இதுவரையில் அவன் எனக்குச் சோறுபோட்டதே பெரிது. இதற்குமேலும் இருந்தால், உன் அம்மாமி ஏதாவது வார்த்தை சொல்வாள். அதை நான் பொறுக்கமாட்டேன். உனக்கு எப்படியும் இருபது ரூபாயில் வேலை கிடைக்குமல்லவா? தகுந்த சிபார்சுகளைக்கொண்டு ஒரு வேலையைத் தேடிக்கொள். இருபது ரூபாய் கிடைத்தால் போதும். நமக்கு நிலத்திலிருந்து வருவதை நெல்லாக வேண்டுமானாலும் தருவித்துக் கொள்வோம். உனக்கு அப்படி படித்துத்தேற வேண்டுமென்றால், வீட்டிலிருந்தே வாசித்துப் பரீட்சை கொடு.”

“துரைசாமிகூடப் பரீக்ஷையில் தேறிவிட்டான். அவன் மேலே படிக்கப்போகிறானாம்.”

“அவனுக்கு சொத்து உண்டு. அப்பா சம்பாதிக்கிறார். மேலும், அத்தை நினைத்தால் அவன் படிப்புக்கு என்ன குறை.”

“அத்தையா? அவள் விஷயங்கள் அவனுக்குப் பிடிக்கிறதேயில்லை. அவன் அவளிடம் போய்ப் பணம் கேட்பானென்று நினைக்காதே. அவன் அப்பாவுக்கே தங்கையைக்கண்டால் ஆகாது. அவள் நடத்தையைப்பற்றி அவரே கண்டிக்கிறார்.”

“எல்லாம் பணம் என்றால் பேசாமலிருப்பார்கள்.”

“அப்படியில்லை. அது விஷயம் உனக்குத் தெரியாது. அவர்கள் எல்லோருக்கும் சேஷி சித்தியைக்கண்டால் பிடிக்காது. அவர் பெண் பார்வதிக்குக்கூட அப்படித்தான். ஒருநாள் சித்தியைக்கண்டபடி அவள் வைதாள்.”

“எனக்குக்கூட ஒரு யோசனை இருந்தது. அது சரிப்படாதென்று விட்டுவிட்டேன்.”

“என்ன யோசனை?”

“பார்வதியை உனக்குக் கலியாணம் செய்து வைத்து, உன்னை அவர்கள் படிக்க வைத்துக் கொள்ளச் செய்யலாமென்றுதான். உனக்குச் சம்பளம் இருக்காது; சாப்பாடுதானே. அவர்கள் போட்டுவிடுகிறார்கள். ஏதோ எப். ஏ. யாவது படித்தால் நல்ல வேலை கிடைக்குமென்று பார்த்தேன். நான் இன்னும் எத்தனை நாள் இங்குக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதோடு, கோவிந்தையர் அவராம்படையாள் குணமெப்படியோ தெரியாது. அவர்கள் சேஷியைச் சேர்ந்தவர்களாகையால், அவர்களோடு சம்பந்தமே வேண்டாமென்று தோன்றுகிறது. ஆகையால்தான் சும்மாயிருக்கிறேன்.”

“எல்லாவற்றிற்கும் நான் ஒருதடவை கோட்டைக்குப் போய்வருகிறேன். அங்கே சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்துவிட்டால், மேலே படிக்கலாமல்லவா?”

“நீ அவ்விதம் செய்வது எனக்கு சௌகரியமாயிருக்குமா? நான் இங்கிருப்பது கஷ்டமாக இல்லாவிட்டாலும், அவள் என்ன சொல்வாளோ என்ற பயந்தான் இருக்கின்றது.”

நீலகண்டன் மேலே ஒன்றும் பேசத்தோன்றாதவனாய், வெளியே போய்வருவதாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அடுத்த மூன்றாம்நாள் திருப்பதி சமாராதனை நடக்கப்போகிறதாகவும், அதற்காக துரைசாமியும், அவன் பெற்றோர்களும், பார்வதியும் வரப்போகிறதாகவும் நீலகண்டன் கேள்விப்பட்டான். எல்லா விஷயங்களையும் துரைசாமியுடன் கலந்து யோசனை செய்யலாமென்று அவன் எண்ணியிருந்தான்.

நீலகண்டனுக்கு வைத்யர் நடேசய்யரிடம் எப்படியோ அத்தியந்த விசுவாசம் உண்டாய்விட்டது. அவன் பொழுதுபோகாத வேளைகளில் அவருடன் பேசிக்கொண்டிருப்பான். அவருக்குமனுஷ்யாளைக்கண்டால் வெகுப்ரியம். அதிலும், நீலகண்டனிடத்தில் அதிக ப்ரியம் என்று சொல்லலாம். நீலகண்டன் தன் வீட்டு விஷயங்களையெல்லாம் அவரிடம் சொல்லி

யோசனை கேட்பான். அவன் தன் வீட்டிலிருந்து புறப்பட்டதும், நேராக வைத்தியர் வீட்டுக்குப்போனான். வைத்தியர் உட்கார்ந்துகொண்டு ஏதோ வாசித்துக்கொண்டிருந்தார். அவன் வந்ததும், அவர் புஸ்தகத்தைக் கீழே வைத்துவிட்டு அவனை உபசரித்தார்.

"மாமா! என்ன வாசித்துக்கொண்டிருக்கிறீர்கள்?"

"இது ஒரு ஜோஸ்யப் புஸ்தகம்."

"உங்களுக்கு ஜோஸ்யம் தெரியுமே! ஒரு ப்ரச்னம்."

"நூற்றெட்டுக்குள் ஒரு எண் சொல்லு."

நீலகண்டன் ஒரு எண் சொன்னான்.

நடேசய்யர் சற்று நேரம் ஆலோசனையிலாழ்ந்தவராய்க் கண்மூடியிருந்து பிறகு;

"நீ கேட்ட ப்ரச்னம் படிப்பைப்பற்றி. படிப்பு விருத்தியடையும்; அதோடு தனவந்தனுமாவாய்."

"கேட்ட கேள்வி படிப்பைப்பற்றித்தான். ஆனால், பலன்தான் ஸந்தேகம்.

"என்?"

"ஏனெனில், இனி படிக்கமுடியாதென்று தோன்றுகிறது. என் மாமா இனிமேல் படிப்புக்கு உதவிசெய்வாரென்று சொல்லுவதற்கில்லை. என் ஆஸ்தியும் குறைவென்பது உங்களுக்குத் தெரிந்ததுதான்."

"ஏன், உனக்கு இந்தவருஷம் யாராவது பெண்ணைக்கொடுத்துப் படிக்கவைத்தால்?".

"அதெல்லாம் எங்கேமாமா நேரப்போகிறது. அதோடு, தனவந்தனாகப்போகிறேன் என்றீர்களே."

"பணக்காரவீட்டுப் பெண்ணாயிருந்து, அவளுக்கு ஏதாவது சொத்து வைக்கப்பட்டிருந்தால், அப்போது நீ பணக்காரனாவாயல்லவா?',

"நான் மேலே படிப்பேனா?"

"படிப்பாயென்றுதான் சொல்லுகிறேன்"

"அப்படியானால், இந்தவருஷம் கலியாணம் நடக்குமா?"

அவ்விஷயத்தை ஜாதகத்தைப் பார்த்துத்தான் சொல்லவேண்டும்.

"ஆனால் அதை நாளைக்குக் கொண்டுவருகிறேன்; பார்த்துச் சொல்லுகிறீர்களா?"

"அப்படியே பார்க்கிறேன்."

நீலகண்டனுக்கு நடேச வைத்தியரிடத்தில் அதிக நம்பிக்கை உண்டாகையால், அவர் சொல்லுவது சரியாயிருக்குமென்று எண்ணினான். அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு அவன் மனக்கோட்டை கட்டலானான். அவன் பார்வதியின்மேல் கொண்ட ஆசையை இன்னும் விட்டுவிடவில்லை. "ஸமாராதனைக்கு அவர்கள் வந்தாலும் வரலாம். அப்போது துரைசாமியின் தாயார் எப்படியிருக்கிறாள் என்பதை என் தாயார் பார்த்தால், அவளுடைய குணம் நன்றாய்த்தெரியும். ருக்மணியம்மாளுக்கு சிற்றியைக் கண்டால் பிடிக்காது இவ்விஷயம் அம்மாவுக்குத் தெரிந்தால் நல்லதுதான். பார்வதியின் குணமும் அம்மாவுக்குத் தெரிந்துவிட்டால், அவள் கல்யாணத்துக்குத் தடையொன்றும் சொல்லமாட்டாள். ஸ்காலர்ஷிப்புக் கிடைத்துவிட்டால் சாப்பாடுதானே. கோவிந்த மாமாவுக்கு அது ஒரு பெரிதல்ல. மாமனாரகத்தில் சாப்பிட்டுக்கொண்டு வாசிப்பது கொஞ்சம் கௌரவக் குறைவுதான். ஆனால், அவர்கள் நல்லவர்கள்.

"அப்பொழுதே ஜாதகம் சரியாயிருக்கிறதென்று சொன்னார்கள். நாம் வைத்தியரிடமும் காட்டுவோம்; அவர் சொல்லுவதையும் கவனிப்பது நலம்" என்றிவ்வாறெல்லாம் நீலகண்டன் யோசனை செய்தான்.

திருப்பதி ஸமாராதனையின் முதல்நாள் கோவிந்தையயரும் அவருடைய குடும்பமும் கல்யாணபுரம் வந்து சேர்ந்தார்கள். வந்ததும், அவர்கள் நேராகச் சேஷி வீட்டுக்குப்போகவில்லை. ஸீதை அதற்கு இரண்டுநாள் முன்

னேயே ஊர்வந்துவிட்டதனால், சாம்பசிவய்யர் வீட்டிலேயே அவர்கள் தங்கினார்கள்.

மறுநாள் காலையில் நீலகண்டன் துரைசாமியைப் பார்க்கச்சென்றான். துரைசாமியும் அவன் பெற்றோர்களும் அவனை அன்புடன் வரவேற்றார்கள். ருக்மணியம்மாள் ஸீதையிடம் நீலகண்டனைப்பற்றிப் புகழ்ந்துபேசினாள்; தன் பெண் பார்வதியை அவனுக்குக் கலியாணம் செய்துவைக்க எண்ணியிருப்பதாகவும் தெரிவித்தாள். ஸீதை தான் ஊரிலிருந்து வந்த இரண்டு மூன்று நாட்களுக்குள் சுந்தரம்மாளின் நற்குணங்களைப்பற்றிப் பிறர் சொல்லக் கேட்டிருந்ததனால், நீலகண்டன் பேரில் அவள் அஸூயையைக் கொள்ளவில்லை. மேலும், அவள் தன் நாத்தனாரையும் அவளுடைய பிள்ளையையும் வெறுத்ததமையால், சுந்தரம்மாளுடன் சம்பந்தம்செய்வது அவளுக்குத் திருப்தியாகவேயிருந்தது. அதோடு, தான் அதுவரை சுந்தரம்மாளைப் பார்க்காமலிருந்தது பிசகு என்று எண்ணி, நதிக்குப்போகும் போது அவளை விசாரித்துவருவதென்று நிச்சயித்தாள். ருக்மணியும் இதற்கு உடன்பட்டாள்.

ருக்மணிக்கு ஸமாராதனைக்குவர இஷ்டமேயில்லை. சேஷி எக்கேடு கெட்டாலென்ன என்பதே அவளுடைய கருத்து. ஸீதையும் திருப்பதிக்குப் போயிருப்பாள்; அதற்காகவாவது தான்வரவேண்டுமென்று அவளுடையபுருஷன் வற்புறுத்தியதனால்தான், அவ்வூர்வர அவள் ஸம்மதித்தாள். அதோடு, சுந்தரம்மாளும் அங்கு வந்திருப்பதனால், கல்யாண விஷயமாய்ப் பேசலாமென்றும் ஒரு எண்ணம் ருக்மணிக்குத் தோன்றியது. அதனாலேயே, அவர்கள் எல்லோரும் புறப்பட்டு வந்தார்கள். ருக்மணிக்கு சேஷிகையில் சாப்பிடக்கூட இஷ்டமில்லை. அவள் சமைக்காமல் அலமேலு சமைக்கிறது பாதகமில்லையென்று அவளுக்குத்தோன்றிற்று.

சாம்பசிவய்யர் ஸமாராதனைக்கு] வரும்படி ராமய்யரைக் கூப்பிட்டார். கூடுமானால், சுந்தரத்தையும் சாப்பிட வரச்சொல்லும்படி கேட்டுக்கொண்டார்; நீலகண்டனையும் அழைத்தார். ராமய்யருக்குச் சேஷியின் விஷயங்கள் பல தெரியுமென்றாலும், அவற்றை அவர் வெளிக்குக்காட்டவில்லை. சுந்தரம்மாள் தான் இனி அந்த வீட்டில் காலெடுத்து வைப்பதில்லை என்று சொல்லிவிட்டாள். மேலும், அவள் இன்னும் பத்தியத்திலேயே யிருந்தாள். நீலகண்டன் மாத்திரம் சமயோசிதம்போல் நடந்துகொள்வதாகச் சொல்லிவிட்டு, கடைசியாகப் போவதில்லையென்றே தீர்மானித்துவிட்டான்.

ருக்மணியும் ஸீதையும் காலையில் சேஷிவீட்டுக்குப்போய்ச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்துவிட்டு, ஆற்றுக்குப்போனார்கள்; போகும் போது வழியில் ஸுந்தரம்மாளைப் பார்க்க அவள் வீட்டில் நுழைந்தார்கள். அப்பொழுது சுந்தரம்மாள் பல்துலக்கி மருந்து சாப்பிட்டுவிட்டு, கூடத்தில் ஒரு கம்பத்தில் சாய்ந்துகொண்டிருந்தாள்.

இருவரும் உள்ளே நுழைந்ததும், தங்கள் குடங்களைக் கீழே வைத்துவிட்டு சுந்தரம்மாளிடம் போனார்கள். சுந்தரம்மாள் அவர்களை வரவேற்று உபசரித்தாள்.

வந்தவர்கள் பேசுமுன், நீலகண்டன் அவர்கள் இன்னாரென்பதைத் தன் தாயாரிடம் தெரிவித்தான். பிறகு சுந்தரம்மாள், "உங்களை எப்பவோ பார்த்தது; எனக்கு ஞாபகமில்லை. அப்புறம் இந்தப்பக்கம் யார் வருகிறார்கள்."

ருக்மணியம்மாள்:—அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தால்தான் பழக்கமிருக்கும். இல்லாவிட்டால், இன்னாரென்று தெரிந்துகொள்வதே கஷ்டமாகிவிடுகிறது.

சீதை:—எனக்கு நீங்கள் வந்திருப்பதே தெரியாது. நான் இங்கே வந்து இரண்டு மூன்று நாட்கள்தானாகின்றன. நேற்றையதினந்தான் நீங்கள் இங்கிருப்பதாக என் ஆத்துக்காரர் சொன்னார். நேற்று ஸாயங்காலம் வர ஒழியவில்லை. ராத்திரிதான் இவளும் வந்தாள். இன்று மத்தியானம் தங்களைக்காண வரலா

மென்றிருந்தேன். அப்போது ஒழியுமோ ஒழியாதோவென்று இப்போதே வந்துவிட்டேன்.

சுந்தரம்மாள்:—போகிறது. இவ்வளவாவது வந்தது எனக்கு ரொம்ப ஸந்தோஷம். வேறு எனக்கு யார் இருக்கிறார்கள். அவள்தான் எட்டிப்பார்ப்பதே கிடையாது. நானும் அங்கு போவதற்கில்லாமலிருக்கிறது. மேலும், நான் போவதற்கில்லாம லிருக்கும்போது அவள் என்னை ஏதாவது ஒரு பேச்சுச் சொன்னால், அது எனக்கு ஸகிக்காது.

சீதை:—அவள் விஷயமாய் எங்களுக்கும் அப்படித்தான். நீங்கள் அவளிடம் பேசுவதில்லை. நாங்கள் பேச்சுவார்த்தை மாத்திரம் வைத்துக்கொண்டிருக்கிறோம். அவ்வளவுதானே தவிர, வேறொன்றும் இல்லை. இப்போது அவள் வீட்டுக்குக்கூட நான் போவதில்லை. அவள் வேதாந்தமும் பாட்டும் யாருக்குப் பிடிக்கிறது. மேலுக்கு வேதாந்தம்...... அதெல்லாம் நமக்கென்ன. ஒருவர் நமக்குப் பிடிக்கவில்லையென்றால், நாம் தூரவே யிருந்துவிடுவோம்.

சுந்தரம்மாள்:—ஸமாராதனைக்கு யார் சமையல்?

சீதை:—அலமேலு கிழவிதான் இருக்கிறாளே. அவள்கூட எனக்குப் பிடிக்கவில்லை. ருக்மணி வராவிட்டால் நான் இங்கு வந்திருக்கமாட்டேன். நானும் திருப்பதிக்குப் போயிருந்தேனென்று இவர்கள் வந்திருக்கிறார்கள். அலமேலுவும், சேஷியும் சமைத்து நாங்கள் சாப்பிடுவதைவிட, கஷ்டத்தைப் பாராமல் நாங்களே சமைத்துவிடலாமென்று தோன்றுகிறது.

ருக்மணியம்மாள்:—எனக்கும் அப்படிதான் தோன்றுகிறது. அந்தக் கிழவியை ஏதாவது வேறு காரியங்களைச் செய்யச்சொல்லிவிட்டால் போகிறது. உங்களுக்கு உடம்பு கொஞ்சம் தேவலை என்று நீலகண்டன் சொன்னான். இப்போது எப்படி இருக்கிறது?

சுந்தரம்மாள்:—கொஞ்சம் தேவலைதான். இன்னும் பத்துநாள் மருந்து சாப்பிடவேண்டுமென்று வைத்தியர் சொல்லுகிறார்.

ருக்மணியம்மாள்:—நீலகண்டனுக்குப் பரீக்ஷை தேறிவிட்டது; முதல் வகுப்பில் தேறியிருக்கிறான். எங்கள் துரைசாமியும் தேறிவிட்டான். நீலகண்டனை மேலே படிக்கவைக்கப்போகிறீர்களோ?

சுந்தரம்மாள்:—எப்படி படிக்கவைக்கிறதம்மா. இதுவரையில் அவன் படித்ததே பெரிது. ஏதாவது ஒரு பதினைந்து ரூபாயில் வேலை கிடைத்தால் போதும்; ஸௌமாராய்க் காலந்தள்ளலாம்.

சீதை:—தை பிறந்துவிட்டதே. யாராவது பெண்ணைக்கொடுத்துப் படிக்க வைக்கிறார்கள். அவன்தான் நன்றாய்ப் படிக்கிறானே.

சுந்தரம்மாள்:—அதற்கெல்லாம் அதிர்ஷ்டம் வேண்டாமா?

சீதை:—இந்த வருஷம் கல்யாணம் செய்ய உங்களுக்கு இஷ்டந்தானே?

சுந்தரம்மாள்:—நம்முடைய இஷ்டத்தில் என்ன இருக்கிறது. பிராப்தமிருந்தால் நடக்கிறது.

சீதை:—எங்கள் பார்வதி இருக்கிறாள். அவளை உங்கள் பிள்ளைக்குக் கொடுத்துவிடலாம். ஒரே பெண்தான். ஏதோ எங்களாலானதைச் செய்யத் தடையில்லை.

சுந்தரம்மாள்:—அதற்கென்ன. அவளுக்குப் பிராப்தமுள்ள இடத்தில் நடக்கிறது.

சீதை:—உங்களுடைய இஷ்டத்தைச் சொல்லுங்கள்.

சுந்தரம்மாள்:—அது விஷயம் என் உடன்பிறந்தானைக் கேட்டுச் சொல்லுகிறேன். அப்போதே சொன்னான், பின்னால் பார்த்துக்கொள்ளலாமென்று. நீலகண்டன் என்ன சொல்லுகிறானோ அதையும் கேட்கிறேன்.

சீதை:—அவர்களுடைய சம்மதம் இருக்கட்டும். உங்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள்.

சுந்தரம்மாள்:—எப்படியானாலும் சரி. காரியம் நடக்கவேண்டியதுதானே.

சுந்தரம்மாள் பிடிகொடுத்து பேசுவதாக இவர்களுக்குத் தோன்றவில்லை; தங்களையும் சேஷியுடன் சேர்த்துவிட்டாளோ என்று எண்ணினார்கள். இவர்கள் கூடியவரையில் சிரமப்பட்டும், சுந்தரம்மாள் ஸாதகமான பதில் ஒன்றும் சொல்லவில்லை. பிறகு வேறு விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்துவிட்டு இவர்கள் ஆற்றுக்குப் போய்விட்டார்கள்.

இந்த சம்பாஷணைகளையெல்லாம் நீலகண்டன் கேட்டுக்கொண்டிருந்தான்.. ஆகவே, அவர்கள் சென்றதும், அவன் தனது தாயாரைக் கல்யாண விஷயமாய்க் கேட்டான்.

அதற்கவள்: "சேஷியின் ஸம்பந்தமே எனக்கு வேண்டாம். அவளுடைய மனுஷ்யாளோடு உறவாடுவதே கெடுதல்" என்றாள்.

அதற்கு நீலகண்டன், "அவர்களுக்கு சேஷியைக்கண்டால்தான் பிடிக்காதே" என்று சொல்ல, "அப்படியானால், ஸமாராதனையில் அவள் கையால்தானே அவர்கள் சாப்பிடப் போகிறார்கள்" என்றாள் சுந்தரம்மாள்.

ருக்மணிக்கும் ஸீதைக்கும் வாஸ்தவத்தில் சேஷியின்மேல் அஸூயை என்றும், விசேஷ காலங்களில் அதைக் காட்டிக்கொள்ளக்கூடாதென்றும் எவ்வளவோ சமாதானம் சுந்தரம்மாளுக்குச் சொல்லப்பட்டும், அவளுடைய மனம் திரும்பவில்லை.

(இன்னும் வரும்.)

எம். எஸ். கிருஷ்ணஸாமி ஐயர்.

---

## Single Planting of Paddy.

## நெல் ஒற்றை நாற்று நடுகை.

நன்செய் நிலங்களில் நெற்பயிர் செய்துவரும் ஒவ்வொருவரும், நாற்றுக்களைக் குத்துக்குத்தாய் நடாமல் ஒவ்வொன்றாய் நடும் வழக்கத்தை அனுஸரிப்பது நல்லது.

கிருஷ்ணாநதி பாசனங்களில் ஒவ்வொரு முதலாய் நடுவதுதான் சாதாரண வழக்கம். இந்த ராஜதானியில் மற்ற எந்தப்பாகத்திலும், அவ்விடத்திய பயிரைவிட சிலாக்கியமானதைக் காண்பது அரிதாயிருக்கின்றது. திருநெல்வேலி, தஞ்சாவூர் முதலான ஜில்லாக்களில் ஒற்றைநாற்று நடுகையானது பரீக்ஷிக்கப்பட்டு, இப்போது பலராலும் ஆயிரக்கணக்கான நிலங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. சம்பா, பிசானம் முதலான நெல் இனுசுகளெல்லாம் ஒற்றைநாற்று நடுகையால் நல்ல மேனியைத் தரும். இன்னும் இப்படிச் செய்வதனால், கீழே குறிக்கப்படும் அனுகூலங்களும் உண்டாகும்.

(1) நாற்று நட அதிகமான விதை வேண்டியதில்லை.

(2) நாற்றங்காலில் நாற்றைப் பிடுங்கி முடிச்சுமுடிச்சாய்க் கட்டும் செலவும், அவ்விதம் கட்டிய முடிச்சுக்களை நாற்றங்காலினின்று நடுமிடத்திற்குக் கொண்டுபோகும் கூலியும், சிரமும் குறைகின்றது.

(3) களையெடுத்தல் சுலபமாவதுடன், தண்ணீரும் எளிதாய் வயலில் பாயும். இதனால், உறை,நெல்சக்களத்தி, வெப்பம்பாசி முதலான களைகளைப் பரவவிடாமல் தடுத்துவிடலாம்.

(4) நாற்றங்காலில் விதையைக் குறைத்துப் பாவுகிறதனால், அதில் முளைக்கும் நாற்றுக்களும் மிகவும் திடமாயிருக்கின்றன. ஆதாரணமாய், நடுகை காலங்களில் பெய்யும் மழைகளால் வயல்களில் தண்ணீர் தேங்கினாலுங்கூட, நடப்பட்ட நாற்றுக்கள் திடமானவை

யானதனால், அவை அழுகிக் கெட்டுப்போகாமல், தண்ணீர்ப்பெருக்கையும் தாங்கும் சக்தியையுடையவையா யிருக்கின்றன.

(5) தண்ணீர்த்தட்டு உண்டாகும் காலங்களில், இப்படி நட்ட பயிர் வாட்டங்கொடுக்காமல், அதிக நாட்களுக்குக் காய்ச்சலைத் தாங்குகின்றது.

(6) ஒற்றை முதலாய் நட்டபயிர்கள் மற்றபடி நட்ட பயிர்களைவிட வீரியமாய் இருப்பதுடன், நோய் நொடிகளால் அவை அதிகமாகப் பீடிக்கப்படமாட்டா. தஞ்சாவூர் ஜில்லாவிலும், இன்னும் நெல் பயிரிடும் இதர ஜில்லாக்களிலும், எவ்வளவோ நஷ்டத்தையுண்டு பண்ணும் 'சூரை' நோயானது ஒற்றை முதலாய் நட்ட இடங்களில் காண்பது அரிது.

(7) ஒற்றை முதலாய் நட்ட பயிரில், தானியங்கள் ஒரே நிதானமாய் முற்றிப் பதர் அதிகமில்லாமலிருப்பதனால், கண்டு முதல் அதிகமாய்க் கிடைக்கும்.

ஆகவே, ஒற்றை முதலாய் நடும் வழக்கத்தை எல்லோரும் எவ்வித சிரமுமின்றி அனுஷ்டிக்கக்கூடும். அப்படிப்பட்டவர்களுக்குக் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் குறிப்புக்கள் பிரயோஜனமுள்ளவையாய்க் காணப்படும் :—

(1) விதை நல்லதாயும், நன்கு காயப்போட்டு பத்திரப்படுத்தியதாயு மிருந்தால், எழுசெண்டு நாற்றங்காலில் எழு பட்டணம் படி விதை நாற்றுப் பாவினால், ஒரு ஏக்கர் நிலத்தில் நடப் போதுமான நாற்றுக்கள் கிடைக்கும். தஞ்சாவூரில் கிருஷிகர்களுள் பலர், ஒரு ஏக்கர் நிலம் நட, மூன்று பட்டணம் படி சிறுமணியையாவது சிவப்புச் சம்பாவையாவது நாற்றுப் பாவுவதாகச் சொல்லப்படுகின்றது.

(2) கூடுமானவரையில் முந்திய வருஷத்தில் ஒற்றைநாற்றாய் நட்ட பயிரிலிருந்தே விதையைச் சேகரிக்கவேண்டும். முதன்முதல் இவ்விதம் செய்வது அவசியமில்லாமற் போயினும், ஒருமுறை ஒற்றை முதலாய்ப் பயிர் செய்துவிட்டால், அந்தப் பயிரிலிருந்து தேவையான விதையைக் கையிருப்பில் வைத்துக்கொள்ளலாம்.

(3) புழுதிக்காலில் பாவின நாற்று சேற்றுக்காலில் பாவிய நாற்றைவிட திடமாயிருக்கும்.

(4) நாற்றங்காலில் நாற்று அதிகமாய் முற்றிப்போகுமுன் பிடுங்கிநடவேண்டும். நாற்று விடப்பட்டிருக்கும் நெல் இனத்தில் மொத்த வயதைக் கணக்கிட்டு, ஒருமாதம் வயசுக்கு ஒருவாரத்திற்குமேல் நற்றங்காலில் நாற்றை வளரவிடக்கூடாது. உதாரணமாக : ஐந்து மாதங்களில் விளையக்கூடிய நெல் தினுஸின் நாற்றை, 35 நாட்களுக்குமேல் நாற்றங்காலில் வளர விடக்கூடாது.

(5) ஒற்றைநாற்று நடுகையானது, எவ்வளவு தூரத்திற்கு ஒன்று நடப்படவேண்டுமென்னும் விஷயத்தைக் கிருஷிகர்களே நிதானித்துக்கொள்ளவேண்டும். எனினும், கீழ்க் குறிக்கப்படும் அளவுகளும் கவனிக்கப்படலாம். ஏக்கரா ஒன்றுக்கு ஆயிரம் பட்டணம் படிக்குமேல் மாசூல் கொடுக்கும் நிலங்களில் சாண் ஒன்றுக்கு ஒரு நடுகையும், ஏக்கர் ஒன்றுக்கு 750 பட்டணம் படி மாசூல் கிடைக்கும் நிலங்களில் முக்கால் ஜாணுக்கு ஒரு நடுகையும், ஏக்கரா ஒன்றுக்கு 500 பட்டணம் படிக்கு மேல்படாத மாசூல் கொடுக்கும் நிலங்களில் அரை ஜாணுக்கு ஒரு நடுகையும் போடுதல் ஒரு சமயம் பொருந்தும். சாதாரணமாய் ஏக்கரா ஒன்றுக்கு 1,500 பட்டணம்படி மாசூல் கொடுக்கும் கொழுத்த நிலங்களில், ஒரு நடுகைக்கும் மற்றொரு நடுகைக்கும் இரண்டு ஜாண் தூரமிருந்தால் நல்ல மாசூலை எதிர்பார்க்கலாம். ஆனால், நடுகை செய்யாதவும் எப்பொழுதும் விதைப்பையே கையாடிவருவதுமான மிகவும் கேவலமாயிருக்கும் நிலங்களில் ஒற்றைநாற்று நடுவதனால் அதிகமான மாசூல் கிடைக்கலாமென்று சொன்னபோதிலும், அப்படி நட்டதனால் கிடைக்கும் ஜாஸ்தி மாசூலை

விட, ஒற்றைநாற்றாய் நெருக்கி நட செல்லும் செலவு ஜாஸ்தியாகவே யிருக்கும்.

ஒற்றைநாற்று முதன்முதல் நடப்படும் பொழுது பார்வைக்கு மிகவும் கலப்பாயும் கேவலமாயும் தோன்றும். இக்காரணம்பற்றி, முதன்முதல் இதைக் கையாடும் கிருஷிகர்கள் அதைரியப்படக்கூடாது. அருகில் பயிரிடும் கிருஷிகர்கள் இவ்விதம் நட்ட பயிர் கெட்டுப் போகுமென்று முன்னாடி பயமுறுத்தினாலும், தைரியத்தைக் கைவிடக்கூடாது. 10, 20 அல்லது 30 நாற்றுக்களை வைத்து நடும் இடத்தில் ஒரு நாற்று நட்டிருத்தல் பார்வைக்கு மிகக் கலப்பாய்த்தான் தோன்றும். ஆனால், இந்தப் பயிர் நாளாவட்டத்தில் களைத்துப் பக்கம் வைத்துக் காலி இடத்தை மூடிக்கொண்டு, அக்கம்பக்கங்களில் குத்துக்குத்தாய் நட்ட நடுகைகளைவிடப் பார்வைக்கு மேன்மையாகவே யிருக்கும்.—வியவசாயத் துண்டுப் பிரசுரத்திலிருந்து சுருக்கி எழுதப்பட்டது.

---

## Industriousness and Work.

BY MR. T. R. RAJAGOPALAN.

## ஊக்கமும், உழைப்பும்.

"நெடுநீர் மறவி மடிதுயி னான்குங்
கெடுநீரார் காமக்கலன்"

"ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்."

வாழ்வென்ற இனிய செடியை மிகச் செழிப்புடன் வளரச்செய்வது ஊக்கம் என்ற தெண்ணீரே. அறிவின் விசாலத்திற்கும், நாகரிகக் கிளர்ச்சிக்கும், மாந்தரின் முதிர்ச்சிக்கும் இன்றியமையாத சாதனங்கள் ஊக்கமும், உழைப்புமே. உழைப்பினால் பாமரன் கலைஞனாகலாம்; கசடன் அசேலனாகலாம்; ஏழை தனவந்தனாகலாம். புத்தி வளப்பத்தினால் மனிதன் இதர ஜீவப் பிராணிகளைவிடப் பன்மடங்கு பெரியவனாக விளங்குகிறான். ஆனால், அப்புத்தியைத் தக்க உழைப்பினால் நன்மார்க்கங்களிற்புகுத்தி, யாவர்க்கும் நன்மைபயக்கக் கூடியவைகளையே பின்பற்றிச் செய்வதில் உபயோகிக்காவிடின், நாளடைவில் அது மழுங்கி உபயோகமற்றதாகிவிடும். எடுத்தாளாத ஆயுதம் துருப்பிடித்ததைப்போல், ஒரு வேலையையும் மேற்கொள்ளாது வாளா ஒருவன் வீணில் கழிப்பானானால், தேகாரோக்கியம் குன்றி, அறிவு தாழ்வடைந்து, வியாதிஸ்தனாகவும், உன்மத்தனாகவும் மாறி, தனக்கும் பிறர்க்கும் எவ்வித நன்மையுமில்லாது சோற்றுக்குக் கேடும் பூமிக்குப் பாரமுமாக ஆகிவிடுவான். தேகத்தைப் பலப்படுத்தி, விவேகத்தை அதிகரிப்பித்து, விசுவாசம்-வீரம்-வைராக்கியம் முதலானவைகளைப் பெருகச்செய்து இவ்வுலக வாழ்வில் ஓர் உற்சாகத்தை உண்டுபண்ணுவது ஊக்கமும், உழைப்புமே. ஊக்கமும், உழைப்புமாகிய எண்ணெயும் திரியும் ஜீவான்மாவாகிய தீபத்தைப் பிரகாசிக்கச் செய்து சோம்பல், தரித்திரம்-பிணி என்பனவற்றால் உண்டாகும் துக்கமாகிய அந்தகாரத்தைத் துரத்துகின்றன. எங்ஙனம் விளக்கெண்ணெய் குறையக்குறைய பிரகாசமும் குறைவடைகின்றதோ, அல்லது மலினம் நிரம்பிய எண்ணெயினால் விளக்கு நன்கு விளங்காதோ, அங்ஙனமே, உழைப்பு அதாவது பிறருடைய மனத்தையும்-இருதயத்தையும் தெரிவித்து உயர்த்தி நன்கு எய்துதற்கு உதவுவதான உழைப்பில்லாவிடின், ஜீவாக்னியின் சக்தி குறைந்து ஒடுங்கிப்போம். மிடியின் காரணம் மடியே; மடியின் தூண்டுகோல் மெய்யறிவின்மை; மீண்டும் அவித்தையின் காரணம் மடியேயாகும். தெளிவுறச் சொல்லின், மடியும்-மிடியும்-அஞ்ஞானமும்-அவஸ்தையும் ஒன்றையொன்று இடைவிடாது தொடர்ந்துகொண்டே

யிருக்கும். தேகவன்மைக்கும், மனோதிடத்திற்கும் அடிப்படை, அல்லது ஆதாரமாக இருப்பது ஊக்கமும் உழைப்புமே. வாழ்க்கையின் அத்தியந்த நண்பர்களாக நின்று உதவி புரியும் மிக்க மேலான விசுவாசமும் தைரியமும், மேற்சொல்லிய ஊக்கம் உழைப்புகளினால் மிகச் செழிப்புடன் வளர்த்தப்படுகின்றன. நரகத்தில் அழுத்துவது மடியாகும்; சுவர்க்கத்தில் அமர்த்துவது உழைப்பாகும்; மடியின் மகவு தீமை; தீமையின் மாற்றாந்தாய் அவிவேகம். சுவர்க்கம் என்பது ஒரு உயர்ந்த சிகரத்தின்மீது இருக்கின்றது; அங்கு செல்வதற்கான பாதைகளோ செங்குத்தாகவும், கூரிய கட்களும் முள்களும் நிரம்பியதாகவுமிருக்கின்றன. இத்தகைய பாதைகளை எளிதிற் கடந்து மேற்செல்வது எங்ஙனம்? தக்க உழைப்பினாற்றான். மடியினாற் பீடிக்கப்பட்டு இருந்து வருபவன் விஷச்செடிகள், அல்லது முதிர்ந்த நாகங்களைவிட அதிக அபாயகரமுள்ளவனாகிறான். முயற்சியில்லாதவனுக்கு மனவமைதியும், இன்பமும், ஆரோக்கியமும் எங்கிருந்து உண்டாகும்? முயற்சி செய்யாதவன் இகழ்ச்சிக்குரியவனாகிறான்; பற்பல இன்னல்களுக்கு அடைக்கலமாகிறான்; கடவுளின் துரோகியும், மானிடராசியின் விரோதியும், அஞ்ஞானத்தின் உறைவிடமும், கொலை-களவு-கட் காமக் குரோதிகளின் சிநேகிதனுமாகிறான்.

“விதியை மதியால் வெல்லலாம்;” மதியை மேன்மேலோங்கி வளரச்செய்வது ஊக்கமும், உழைப்புமே. “முயற்சியுடையா ரிகழ்ச்சி யடையார்.” இவ்வான்றோர் மொழிகளை மறந்து ஒழுகுதல் நன்றன்று.

மேலும், புதர்களும், குரிஞ்சி முட்களும், விஷச்செடிகளும், சர்பக்ஷிணிகளும் நிறைந்த காடுகளையும், மேடுபள்ளங்களையும் செப்பனிட்டு நாடு நகரங்களைப் பரப்புவது உழைப்பே. பாழ்பூமிகளை உழுது பயிரிட்டு அறுப்பறுத்து, தானியங்களைச் சேமித்து மனிதர்களுக்கு நன்மை செய்வது உழைப்பே; நிஷ்பிரயோஜனமாய் இங்குமங்கும் ஓடியாடித்திரியும் நதிகளை யடக்கி, வாய்க்கால்-குளம்-கிணறு-சிற்றாறுகளாகப் பிரித்து, அவற்றின் தண்ணீரை வயல்களுக்குக் கொணர்ந்து கொழித்து அவைகளைச் செழிக்கச்செய்வது உழைப்பே; பெரும்பெரும் பாறைகளையும், மலைகளையும் தகர்த்து, நாலாபக்கங்களிலும் நூற்றுக்கணக்கான கிளைகளைப் பரப்பிநிற்கும் மாமரங்களை முறித்துத்தள்ளி, அவைகளைக்கொண்டு நேர்த்தியான உயர்ந்த கட்டடங்களை நாடெங்கும் நிரப்புவது ஊக்கமும் உழைப்புமேயாகும்; பூமியில் புதைந்துகிடக்கும் நானாவித உலோகங்களை வெட்டி வெளிப்படுத்திச் சுத்தமாக்குவதும், அலைகடலையும்-கடும்புயல்களையும் கடற்பிராணிகளையும் சுலபமாகத் தாண்டிச் செல்வதற்கான மரக்கலம், அல்லது புகைக் கப்பல்களைச் செய்வித்து, சிதறிக்கிடக்கும் பற்பல தேசங்களை வியாபாரத்தினால் ஒருங்குசேர்த்து, அவ்வியாபாரங்களையும் பெருக்கிப் பலப்படுத்தி, வறுமையை யகற்றி, ஐஸ்வரியத்தை விருத்திசெய்து, நாகரிகத்தை நாலாபக்கங்களினும் வியாபிக்கச் செய்து நிலைநிறுத்துவது உழைப்பேயாகும்; சாதாரண கற்களினின்று விதம்விதமான கண்ணாடிகளை உண்டுபண்ணுவதும், உபயோகமற்றபதார்த்தங்களை, ரசாயன சாஸ்திரத்தினுதவியினால், நல்லவைகளாகச் செய்வதும், பாறை நிலங்களையும், வனாந்தரங்களையும் மாடமாளிகை கூடகோபுரங்கள் நிறைந்த இடங்களாக மாற்றுவதும் உழைப்பென்ற மாந்திரிகனே.

சுருங்கச் சொல்லின், மனோதிடத்திற்குத் தேக வலிமையும், தேக வன்மைக்கு உழைப்பும் இன்றியமையாத கருவிகளாகும்

டி. ஆர். ராஜகோபாலன்.

---

அன்பின் வெற்றி.
இது ஓர் புதிய தமிழ் நாவல்.
இதில் அன்பினாலேயே நாம் எவ்வாறு ஸகல காரியங்களையும் சாதித்துக்கொள்ளலாமென்பது நன்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றது. விலை அணா 3.
வி. என். சர்மாராவ் அண்டு கம்பெனி,
135, தேவராஜமுதலி தெருவு, மதராஸ்.

# Topics from Periodicals.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### மாமரம் பயிர் செய்தல்.

மாமரம் பயிர்செய்யும் விஷயமாய் "விவேக போதினி" யில் ஓர் அரிய வியாசம் காணப்படுகின்றது. அதை இங்குச் சுருக்கமாகப் பிரசுரிக்கிறோம்.

நல்ல மணமுள்ளதும், ருசியுள்ளதுமான பழங்களிலிருந்து கொட்டைகளைச் சேதப்படாமல் எடுத்து, சிறு மண்தொட்டிகளில் நல்ல உரமுள்ள மண் அல்லது களிமண் போட்டு அவைகளில் நடவேண்டும். அக்கொட்டைகளில் பூச்சிபுழு முதலானவை இருத்தலாகாது. அக்கொட்டைகளுக்குத் தினந்தோறும் ஜலம் விடவேண்டும். சிறு செடிகள் முளைத்தபின்பு அவைகள் அதிக மழையினாலாவது காற்றினாலாவது கெட்டுப்போகாமல் பாதுகாத்தல் அவசியம்.

மேலும், இச்செடிகளை வைத்து விருத்திசெய்வதற்கான இடம் அதிக மணற்பாங்காயிருத்தல் கூடாது. ஏனென்றால், மணல்பூமியும், சாள்பூமியும் தண்ணீர் கொள்ளாதாகையால் மாமரம் இவ்விடங்களில் நன்றாய் வளராது. அதற்கு ஈரம் அதிகம் உள்ள தரையே தேவை. மண்ணும், சுண்ணாம்பும், கொஞ்சம்மணலும் கலந்த பூமியானது மாமரத்தின் ஆழமான வேர்களையும், அவ்வளவு பெரிய மாத்தையும் தாங்கச் சக்தியுள்ளது. ஆகையால், இத்தரையிலேயே மாமரம் நன்றாய் வளரும். மேற்சொன்ன பூ்மி அகப்படாவிடின், மணலையோ அல்லது களிமண்ணையோ தரையோடுகலந்து, நல்லபூமியாக உபயோகப்படுத்தலாம். அத்தரையானது பூமி மட்டத்திற்குச் சற்று உயர்ந்தேயிருக்கவேண்டும். அவ்விடத்திற்குக் கிழக்கேயும் தெற்கேயும் யாதொரு அடைப்பும் இருக்கக்கூடாது. அவ்வாறிருப்பின், கீழ்காற்றும் தென்றலும் மாத்தில்படாது. மேலும், பெரிய ஊர்கட்கு அருகாமையில் மாந்தோப்புகள் உண்டாக்குவது பெரும் பேதமையே. ஏனெனில், பட்டணங்களிலுள்ள தூசி இலைகளின்மேல் படிவதால், அம்மாத்திற்கு வேண்டிய காற்றையும் சூரிய வெளிச்சத்தையும் உட்கொள்ள அவ்விலைகளுக்குச் சக்தியில்லாமல் போகின்றது. ஆகையால், மாங்கள் நல்ல வளர்ச்சியில்லாமல் க்ஷீணமடைகின்றன. நிலத்தில் உரமில்லாவிடின், எரு, குப்பை, எலும்புத்தூள் முதலியவைகளை உபயோகப்படுத்தலாம்.

இவ்வாறு பூமியைச் சீர்திருத்திய பிறகு, மாங்கன்றுகளை நடுமுன் நிலத்தை உழவேண்டும். பிறகு, மூன்றடி நீளம், மூன்றடி அகலம், மூன்றடி ஆழமான குழிகளை சுமார் நாடிக்கு ஒன்றாக வெட்டி இரண்டுமாதம் வரையில் அவைகளை மூடாமல் வைத்திருக்கவேண்டும். மாங்களை அதிக நெருக்கமாக நட்டால், மழைகாலத்தில் பூச்சிகள், உண்டாவதுடன், அவை அதிக உயரமாய் வளர்ந்து கிளைகள் இல்லாமல் போகின்றன. குழிகளிலிருந்து வெளியே எடுத்துப்போட்ட மண்ணுடன் ஒருகூடை எருக்குப்பை, கொஞ்சம் எலும்புத்தூள் இவைகளைக் கலந்து, குழிகளை அம்மண்ணால் நிரப்பி, செடிகள் நடுவதற்காகச் சிறு துவாரங்கள் செய்யவும் மழை காலத்திலாவது அல்லது நன்றாய்த் தண்ணீர் சிலநாட்களாகப் பாய்ச்சின பிறகாவது கன்றுக⁽ᵉ⁾த் துவாரங்களில் நடவேண்டும். தொட்டிகளிலிருக்கும் கன்றுகளைச் சாக்கிரதையாக எடுக்கவேண்டும். தொட்டிகளை உடைத்து, கன்றின் வேரைச் சுற்றியிருக்கும் மண் சேதப்படாமல் எடுத்துப் புதைக்கவும். கன்று காற்றினால் அடிபட்டுக் கீழே விழாமலிருப்பதற்காக, பலமான குச்சியொன்றை நேராக நட்டு, அதோடு கன்றைக் கட்டுவது நல்லது. தினந்தோறும் தண்ணீர் விடுவதை நிறுத்தக்கூடாது. ஆனால், நல்ல மழைபெய்த நான்கு அல்லது ஐந்து நாட்களுக்குத் தண்ணீர் விடவேண்டாம்.

ஒவ்வொரு செடியைச் சுற்றியும் பாத்திகட்டி, கோடைகாலத்தில் செடியைச் சுற்றியுள்ள மண் பிளவுபடாமலும் ஈரம் உலராமலும் இருப்பதற்காகப் பாத்தியில் சுமார் இரண்டு அங்குல கனத்திற்குக் காய்ந்த இலைகளைப் போட்டுவைக்கலாம். இவ்வாறு செய்துகொண்டும், தண்ணீர் சரியாய் ஊற்றிக்கொண்டும் வந்தால், சுமார் இரண்டு அல்லது மூன்று வருஷங்களில் மரம் பெரிதாகிப் பூக்கும். இப்பூக்களை நாம் பிடுங்காமல் விட்டுவிட்டால், அவை காயாகிப் பிறகு பழுத்துவிடும். ஆனால், அப்பழங்கள் பெரியனவாயும் ருசியுள்ளனவாயும் இருக்கமாட்டா; மாமும் பிறகு நல்ல பழங்களைக் கொடுக்காது. ஆகையால், முதல்வருஷப் பூக்களைப் பிடுங்குவதே மேல்; இன்னும் இரண்டு வருஷங்களுக்கு அப்படியே செய்தால், பிறகு பெரும் லாபம் அடையலாம்.

ஐந்தாவது வருஷம் வந்ததும், மரம் காய்க்குமாதலால், அதற்கு நல்லுணவு தேவை. அதற்கு, மாத்தின் கிளைகள் சிலவற்றையாவது, சிறு வேர்களையாவது வெட்டவும். ஆனால் மாமரத்தின் வேர்களை வெட்டுவதுதான் சிலாக்கியம். அதற்கு மாத்தைச்

சுற்றி ஆழமாய்த் தோண்டி அடிவேர்களிலிருந்து உண்டாயிருக்கும் சிறு சிம்புவேர்களை மாத்திரம் வெட்டி, எலும்புத்தூள் ஐந்தாறு ராத்தலும், எருவும், குப்பையும், கொஞ்சம் உப்பையும் அந்த மண்ணுடன் நன்றாய்க் கலந்து தோண்டிய குழியை அதால் மூடிவிடவேண்டும். மரம் பெரிதாக வளர்ந்துவிட்டதேயென்று நாம் தண்ணீர்விடாமல் இருக்கக்கூடாது. அப்பொழுதுதான் மரத்திற்குவேண்டிய தண்ணீர் விடவேண்டும். அப்படிச் செய்தால்தான், அடியில் போடப்பட்ட உரம் கரைந்து ஆகாரமாய் வேர்களால் உட்கொள்ளப்படுகிறது. உப்புப்போடுவதனால் மரத்தை அழிக்கும் புழுபூச்சிகள் அழிந்துபோகும்.

சிலநாட்களுக்குப் பிறகு மரம் பூத்துக் காய்கள் உண்டாகின்றன. காய்களைப் பறிக்காவிடில், அவை பழுக்கும். ஆனால், சிலர் காய்களைப் பறித்துப் பழுக்கவிடுகின்றனர். அப்படிப் பழுத்த பழங்கள் ருசியாயிருப்பதில்லை; ஆகையால், மரத்திலேயே பழுக்கவேண்டும். காய்கள் பழுக்கும்பொழுது நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது என்னவென்றால், மரத்திற்கு வேண்டிய தண்ணீர் ஊற்றப்படுகிறதா என்பதே. தண்ணீரில்லாவிட்டால் பழங்கள் காற்றினாலும் வெயிலினாலும் கெட்டு, சரியாகப்பழுக்காமல் கீழே விழுந்துவிடுகின்றன. ஆனால், புரட்டாசியிலிருந்து மார்கழி மாதம் வரைக்கும் அதாவது செப்டம்பர் மாதத்திலிருந்து டிஸம்பர் வரைக்கும் மரத்திற்குத் தண்ணீர் விடுவதை நாம் நிறுத்திவிடவேண்டும். தண்ணீர் விடுவதனால் கெடுதியில்லையென்றாலும், அது வீண் சிரமமே. ஏனெனில், அம்மாதங்களில், போஷணம் மரத்திற்கு வேண்டிய அளவுக்கு மேல் இருப்பதாலும், காய்கள் புதிதாக உண்டாகாமல் இலைகளே உண்டாகின்றனவாதலாலும், தண்ணீர் விட்டும் ஜாஸ்திக் காய்கள் இருப்பதில்லை; இலைகளே அதிகமாகின்றன.

மேலே சொல்லியவாறு, ஐந்துவருஷ காலம் பொறுத்து பிறகு சற்றுக் கஷ்டப்பட்டுப் பழங்கள் உண்டாக்கினால், ஏராளமான லாபம் அடையலாமென்பதற்குத் தடையில்லை. பழங்களோ அதிக ருசியும் மணமும் கொண்டிருக்கும்.

---

## வேப்பிலையின் உபயோகம்.

வேப்பிலைகளின் உபயோகத்தைப்பற்றி ஒரு நிருபர் "வைத்திய கலாநிதி"யில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

வேப்பிலைகளை ஜலத்தில்போட்டுக் காய்ச்சி, பிரஸவித்த ஸ்திரீகளுக்கு அதைக்கொண்டு ஸ்நானம் செய்விப்பதுண்டு. இந்த இலைகளுக்குக் கிருமிஹரமான குணம் உண்டென்பதை உணர்ந்தே நமது பெரியோர்கள் இவ்விதம் ஏற்பாடு செய்தார்களென்று யோசிக்கவேண்டியிருக்கின்றது. இளங்குழந்தைகளுக்கும் இவ்வித ஜலத்தினால் ஸ்நானம் செய்விப்பதுண்டு. இந்த ஜலத்தை உபயோகிப்பதனால், பெரியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் தேகத்தில் எவ்வித விஸர்ப்பமும் சொறிசிரங்கும் ஏற்படுவதில்லை. இதன் இலைகளைக் கல்கமாக அரைத்து எலிகடிக்கு உட்கொள்ளக் கொடுப்பதும், கடித்தவிடத்தில் போட்டலிகையாக (Poultice) ப் போடுவதும் வழக்கம். அடிபட்டு வழுண்டுபோன பாகங்களில்முட்டிவீக்கங்களிலும்கூட இவ்விதம் செய்வதுண்டு. மாதவிடாயில் அநேகம் ஸ்திரீகளுக்குக் கருப்பையிலும் உடலில் மற்ற விடங்களிலும் வலியும், கடுப்பும் அதிகமாய் ஏற்படும்போது, வேப்பிலை இடித்துப் பிழிந்தெடுத்த சாற்றை இரண்டு உத்தாணி அளவாக உட்கொண்டு வருவது அநுகூலமாயிருக்கும். இலையை மென்று விழுங்கினால் பசி உத்தீபனம் ஆகும். இதன் இலைகளிலிருந்து பிழிந்தெடுத்த சாறானது நேத்திரங்களிலுண்டாகும் மாம்ஸ வளர்ச்சியையும், அபிஷ்யந்தமென்கிற கண் நோவையும் நிவ்ருத்தி செய்யவல்லது. நன்கு முதிர்ந்த இலைகளின் ஸ்வரம் பல்லீறுகளில் ஏற்படக்கூடிய கட்டி அல்லது வீக்கத்தைப் பரிஹரிக்கக்கூடியது. குடலில் நாகப்பூச்சிகள் உண்டாயிருந்தால், இரண்டு உத்தரணியளவு இச்சாற்றில் இரண்டு குண்டுமணியெடை உப்பு கலந்து தினத்திற்கு நாலைந்து முறை கொடுக்க நன்மையுண்டாகும். இந்தச் சாற்றிலேயே சிறிதளவு தேன் கலந்து காமாலையில் கொடுப்பதும் வழக்கம். சொறிசிரங்குகளும், வேறுவித சர்மதோஷங்களும்உண்டாயிருந்தால், அவற்றின்மேல் பூசுவதற்கும் இதனிலைச்சாறு மிகவும் உபயோகமாயிருக்கிறது. மஞ்சளும் வேப்பிலையும் ஸமபாகமாய் அரைத்து அழிப்புண்களின்மேல் பூச, நல்ல குணமுண்டாவதாக சக்ரதத்த ஸம்ஹிதை கூறுகிறது. இச்சாற்றை தத்ருவென்கிற படைக்கும் அடிக்கடி போட்டுவரலாம். சவித்ரமென்கிற வெண்குஷ்டத்திற்கு இச்சாற்றையும் சிறிதளவு பசுமூத்திரத்தையும் கலந்துகொடுக்கலாமென்றும் கிரந்தங்களில் கூறப்பட்டுள்ளது. அடிபட்டு அதிகமாய் வெளிவரும் இரத்தத்தைத் தடைசெய்வதற்கும், இந்த இலையின் போட்டலிகை அல்லது சாறு உபயோகமானது. டாக்டர் கே. என். நாயக் அவர்

கள், இந்த இலைகளால் குடும்பங்களுக்கு உபயோகப்படும் மற்றொரு முறையையும் கூறுகிறார். உணவுகளுக்கு உபதம்சமாகத் தென்னிந்தியாவில் செய்யப்படும் ஒருவித சம்பாரப் பொடியிலும் இவ்வேப்பிலையைச் சிறிதளவு சேர்ப்பது வழக்கமாம்; இதற்கு வேப்பிலைக்கட்டி யென்று பெயராம். இதனால் வயிற்றில் வாயு சேருவதும், கிருமிகள் உண்டாவதும் கண்டிக்கப்படும்.

---

## The Diamond Ring.

By Mr. S. Narasimhachariar B.A., B.L.
*High Court Vakil, Madras.*

## வைர மோதிரம்.

### 4-ம் அத்தியாயம்.

ஸாயங்காலம் ஸுமார் நாலுமணி இருக்கும். தான் வாக்களித்த பிரகாரமே, அம்பலவாணன் நல்லாடை தரித்து, ஸ்வாமியை மனத்தில் இருத்தி, தன் வீட்டினின்றும் புறப்பட்டுப் பாண்டுரங்கர் கூறிய இடத்தைச் சென்றடைந்தான். இவனைக்கண்ட பாண்டுரங்கர், மிக்க ஆதரவோடு அவனை எதிர்கொண்டு அழைத்து, உபசரித்துத் தன் பக்கத்திலமர்த்திக்கொண்டு, வீட்டு க்ஷேமலாபங்களை விசாரிக்கலானார்.

"உங்கள் வீட்டில் எல்லோரும் ஸௌக்கியமா?"

"ஈச்வரன் கிருபையால் அனைவரும் ஸௌக்கியமே. தாங்களும், தங்களைச் சேர்ந்தவர்களும் ஸௌக்கியமென்றே நான் நம்புகிறேன்".

"ஆஹா! எல்லோரும் சுகம்தான். உங்களூரில் நல்ல மழையுண்டா இந்த வருஷம்? குடிகளுக்கு எவ்விதக் குறைகளுமிராதென்றே எண்ணுகிறேன்."

"இந்த வருஷம் நல்ல மழை பெய்ததென்று சொல்ல முடியாது. ஆயினும், விளைவு கிருஷிகர்களுக்குத் திருப்தியையே தந்தது. கால்நடைகளுக்கும் தீனிக்குக் குறைவில்லை. இவ்விதமே எங்கும் உண்டென்று நான் நினைக்கிறேன்."

"எங்களுக்கு இந்த வருஷம் எவ்விதக் குறைவுமில்லை. தக்ககாலத்தில் நல்லமழை பெய்தது. ஏரி குளங்களெல்லாம் நிறைந்தன. குடிகளும் காலமுறைப்படி உழுது நல்லபலனை யடைந்தார்கள். எல்லாம் கடவுள் கிருபையே.—நீ திடீரென்று இந்த ஊருக்கு வந்ததன் காரணமென்ன? உன் பெற்றோர்கள் இங்கிருக்கிறார்களா?

"என் தாய்தந்தையர் இப்போது இங்கு வந்திருக்கிறார்கள். அவர்களுடனே தான் நானும் வந்தேன். நான் மாத்திரம் தனியாய் இந்த ஊர் வருவதற்கு யாதொரு காரணமுமில்லை."

"ரொம்ப ஸந்தோஷம். குடும்பமுழுதும் இப்போது இங்கு வந்ததன் விசேஷமென்னை?"

"விசேஷம் ஒன்றுமில்லை. என் தாயார் ஸ்ரீ வேங்கடாஜலபதியை தரிசிக்க விரும்பினார்கள். அதற்காக நாங்கள் எல்லோரும் புறப்பட்டு வந்தோம். இன்னும் இரண்டு தினங்களில் ஊருக்குத் திரும்ப உத்தேசித்திருக்கிறோம். நான் எதிர்பாராத காலத்தில் தங்களைச் சந்திக்க நேர்ந்ததைப்பற்றி எனக்கு மிக்க ஸந்தோஷம்."

"எனது நண்பர் ஒருவர் நேற்று சந்திரகிரியில் கிரவப்பிரவேசம் செய்தார். அதற்காக நாங்கள் நான்கு தினங்களுக்குமுன் அங்கு வந்தோம். உன்னையும் தற்செயலாய் இங்குக்காண நேர்ந்தது. என்ன உன் உடம்பு மிகவும் இளைத்திருப்பதாகக் காணப்படுகின்றதே.? தேகஸௌக்கியம் குறைவாயுள்ளதோ?" என்று பாண்டுரங்கர் வினவினார்.

பாண்டுரங்கர் சாய்ந்துகொண்டிருந்த சுவற்றில், அவருடைய தலைக்கு நேரே ஒரு ஜன்னல் இருந்தது. ஸரியாக இந்த ஸமயத்தில் தன் பிதாவினிடம் ஏதோ விஷயத்தைச் சொல்வதற்கு, ஸௌந்தரவல்லி தற்செயலாய் அச்சுவற்றிற்கு அப்புறம் வந்தாள். வந்தவள் அம்பலவாணனைக் கண்டு, சற்றே நாணி, புன்னகைசெய்து, உடனே அப்புறம் போய்விட்டாள். தன் மனதைக் கவர்ந்த கட்டழகியைக் காணலாமென்ற எண்ணத்தோடே அங்கு வந்திருந்த அம்பலத்திற்கு, ஆனந்த மேலீட்டால் மெய்கூச்செறிந்தது. எல்லாம் கடவுளருளாலல்லாமல் மனிதராலாவது ஒன்றுமில்லை என்று நினைக்குந்தோறும், மேலும் மேலும் மகிழ்ச்சி பொங்க, காதல் என்னும் கன்னற்சுவையால் மனம் பூரித்ததால், பாண்டுரங்கர் கேட்ட கேள்வியை அவன் மறந்தானகையால், அதற்கு ஒன்றும் பதில்கூறாது மௌனமாயிருந்தான்.

"என்ன! அம்பலம்! நான் கேட்டதற்குப் பதில் ஒன்றையும் காணோம்" என்று மறுபடியும் பாண்டுரங்கர் கேட்டார்.

அம்பலவாணன் ஒரு விநாடிகாலம் யோசித்தான். ஸௌந்தரவல்லியைக் கண்ட சந்தோஷம் ஒருபக்கம் அவனைக் களிப்பித்தது. பாண்டுரங்கருக்கு என்ன பதில்சொல்வதென்று ஒன்றும் அவனுக்குத் தோன்றவில்லை. "உள்ளதை அவரிடம் சொல்வோம். அவர் எப்போதும் என் மீது அன்புள்ளவர். இதற்கு அவர் ஸம்மதப்பட்டாலும், இல்லாவிட்டாலும் சரி. நாம் இனிமேல் மௌனமாயிருப்பதில் பலன் ஒன்றுமில்லை. வீணாக மனதில் அடக்கிக்கொண்டு திரிவதைக் காட்டிலும், அது கைகூடுமா? என்பதைத் தெளிவாய்த் தெரிந்துகொள்வதே நலம்" என்று அவன் தனக்குள்ளேயே துணிந்து,

"அன்புள்ள மாமா! தாங்கள் இதுவரை என்மீது பாராட்டிவந்த அன்பே, இன்று நான் தங்களுக்குப் பதிலுரைக்கக் காரணமாயிருக்கின்றது. என்னுடைய பதில் தங்கள் கருத்துக் கிசைந்திருந்தாலும், இல்லாவிடினும், தங்களுக்கு என்மீதுள்ள அன்பு மாத்திரம் குறையாமலிருக்கும்படி வேண்டுகிறேன். என்னுடைய பத்தாவது பிராயத்தில் சுந்தரவல்லியும் நானும் நேசங்கொண்டோம். அன்றுமுதல் இன்றுவரையில் ஸௌந்தரத்தின் ஞாபகம் என்மனத்தைவிட்டு ஒருக்ஷணமேனும் பிரிந்திருக்கவில்லை. மத்தியில் தங்களுக்கும் என் பிதாவுக்கும் நேரிட்ட மனஸ்தாபத்தினால் தங்களுடைய மனது என் விஷயத்தில் ஒருகால் வேறுபட்டிருக்குமோவென்று பயந்து வியாகூலமடைந்திருந்தேன். இன்று தாங்கள் பாராட்டிய அன்பும் ஆதரவும் எனக்கு மிகுந்த ஸந்தோஷத்தைத் தந்தது. ஆதியில் நாங்களிருவரும் கொண்ட ஸ்நேகமானது காதலாக மாறியுள்ளது. தாங்கள் என்ன எண்ணியிருக்கிறீர்களென்பது எனக்குத் தெரியாது. நான் கூறிய விஷயம் தங்கள் இஷ்டத்திற்குஇசைந்துள்ளதாவென்பதைப்பற்றி நான் கவலைப்படுகிறேன். என் மனம் முற்றும் விவரமாக அறிந்த தங்களுக்கு, நான் அதிகம் கூற வேண்டியது ஒன்றுமில்லை" என்று கூறி முடித்தான்.

(இன்னும் வரும்.)

எஸ். நரஸிம்மாசாரியர், பி.ஏ., பி.எ[illegible]

## புதிய தமிழ் நாவல்கள்.

| | | | |
|---|---|---|---|
| பாலாமணி அல்லது டக்காத்திருடன் ... | 2 | 0 | 0 |
| வஸந்தமல்லிகா ... ... | 1 | 0 | 0 |
| ராஜேந்திரமோஹனு ... ... | 0 | 12 | 0 |
| வஸந்தகோகிலம் ... ... | 0 | 12 | 0 |
| மாயாஸௌந்தரி ... ... | 0 | 8 | 0 |
| மங்கையர்ப்பகட்டு ... ... | 0 | 12 | 0 |
| குப்பன் பித்தலாட்டங்கள் ... | 0 | 8 | 0 |
| உட்டாணி ... ... | 0 | ·6 | 0 |
| கோகிலாம்பாள் ... ... | 0 | 12 | 0 |
| ஆனந்தவல்லி ... ... | 0 | 6 | [illegible] |

வி. என். சாமாராவ் அண்டு கம்பெனி,
135, தேவராஜமுதலி தெருவு, மதராஸ்.